
# தென்மொழி





ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்



சுவடி: 14.
ஓலை: 7.
விலை: உரூ 1.

# நமக்கு வந்த மடல்கள்.

**0.544:** *பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம். இத்திங்கள் தென்மொழி கண்டு இலங்கைத் தமிழர்கள் அடைந்த இன்னல்களை எல்லாம் அறிந்து ஆருத்துயரடைந்தேன்; அடைகின்றேன். உண்மையை விளங்க வைக்க தமிழகத்திற்குத் 'தென்மொழி'' தவிர வேறு எந்த இதழும் துணியவில்லை. என்று, ''தென்மொழி'' தமிழகத்தின் உயிர்நாடி என்று இத்தமிழகம் முழுதும் எண்ணி மதிக்கிறதோ அன்றுதான் தமிழகத்தில் 'மறுமலர்ச்சி' நிகழும்,*

—சி. நா. செந்தமிழ்ச்செல்வன். வேங்கைவாடி. தெ.ஆ.

**0:545:** *அன்புசால் ஐயா, வணக்கங்கள் பல. ஓலை 5-6இல் வந்த ஆசிரியவுரை மிகவும் பயன்தரத் தக்கதாய் உள்ளது. இலங்கை எனுந் தமிழ்ப்பெயர் வந்த கரணியத்திலிருந்து, தமிழன் ஆண்ட வரலாற்றிலிருந்து, அவன் எப்படி விழ்த்தப்பட்டான் என்பனவற்றையெல்லாம் ஆங்குள்ள (இலங்கை) ஒவ்வொரு தமிழர் மட்டுமன்றித் தமிழக மக்களும் அறிந்துகொள்ள வேண்டியதொன்றே. தங்களின் இவ்வுரை இலங்கை வாழ் தமிழர்க்கு, மாமருந்தாகவும், அதே பொழுதில் விரமூட்டியும், 20 கற்களுக்கப்பால் நாலரைக் கோடித் தமிழர்கள் உள்ளோம், அஞ்சாதீர்கள் என உரமூட்டியும் உள்ளது.*

—செ. வ. புகழேந்தி. சென்னை-5.

**0:546:** *'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' இதழ்கள் கிடைக்கப் பெற்றோம். நன்றி. தங்களின் ஆசிரியவுரையால் ஈழத்தில் நடைபெற்ற இன அழிப்பும், கொடுமையும் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள முடிந்தது. அவ்வாசிரியவுரையைக் கண்ட சிலர் தங்களுக்கும் இந்த இதழ் வேண்டுமென விரும்புகின்றனர்.*

பொன். முகிலன், கூகலூர், ஈரோடு.

**0.547:** *அன்பார்ந்த பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம் இம் மாதத் தென்மொழியைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன்-ஈழத் தமிழரின் வரலாற்றை ஏனைத்தமிழரும் அறியச் செய்தமையறிந்து.*

—இல. க. இரத்தினவேல். மதுரை-20.

**0:548:** *அன்பு ஐயாவிற்கு வணக்கங்கள் பல. சென்ற திங்களிதழ் கண்டேன். அவ்விதழ் படித்தவுடன் விறிட்டு வெற்றி வாழ்விற்கு வித்திடவேண்டிய முன்னேற்றக் கருவூலமன்றோ? ஒவ்வோர் எழுத்தும் நவில்கின்ற உயிர்க்கதை தான் என்னே! வாழத் துடித்தும் வறுமைப் பட்டும் வாழும் அவரின் சிற்குலைவிலே நம்மை அமுக்கிய அந்தப் பாட்டிலே தான் எத்தனை உலகோட்டம்! அந்தப் பாட்டின் ஆயிரங் கோடி உந்தும் உணர்வுக் கால்களால் வேழப் பெருந்தோள் எம்பி உறவுண்டு உண்டு என்று முழக்கி, அவர் சிந்தும் கண்ணீர், செந்நீர் துடைக்க வழக்கிடத் துடித்தது. 'குலைக்குள் வெயர்க்குதடா—எம் குடற்குள் சிலிர்க்குதடா' இவ்வரிகளின் உயிரழுத்தம் தான் எவ்வளவு?*

—அன்பரசு. அ. பள்ளிப்பட்டி, அரூர்.

**0:549:** *தென்மொழிப் பாவலரேறு ஐயா, வணக்கம். பொதுவாகவே தென்மொழியின் ஆசிரிய உரைகள், தூங்கிக்கிடக்கும் தமிழர்களைத் தட்டி எழுப்புந் தன்மையன. தமிழனின் தன்மையே ஒரு தனித்தன்மை—வியப்புத்தன்மை! ஏனெனின், தூண்டும்போது எழுவான்! ஆனால் உடனே படுத்துக் கொள்வான். மேலும் விடணப்*

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

# பழந்தமிழ் இனமே!
# பழந்தமிழ் இனமே!

பழந்தமிழ் இனமே! பழந்தமிழ் இனமே!
விழுந்து கிடந்த வெறித்துயில் நீங்கி,
இழந்த பெருமையை இனிமே லாகிலும்
உழந்து தேடி ஒருநிலைப் படுத்த
எழுந்துலாப் போந்த பழந்தமிழ் இனமே!

கொழுந்துவிட் டெறிந்தவுன் அறிவுக் கூர்மையும்
செழுந்தண் மொழியும் செறிந்த சிறப்பும்
உழுந்தள வாகி உருக்குலைந் திட்டே
அழுந்திப் போன அவல வாழ்க்கையில்,
முழந்துணி யின்றி மூங்கைப் பட்டும்—
ஒருபுகல் இன்றி உலகம் ஓடியும்--
தெருவுறு நாயென அடிமை தேடியும்—

—இன்னும் உன்றன் இனந்தனைக் காட்டித்
தின்னும் வழக்கம் தீர்ந்தனை இலையே!

--இன்னும் உன்றன் இழிந்த சாதியை
உன்னும் மனச்செருக் கொழிந்தனை இலையே!

—இன்னும் உன்றன் தாய்மொழித் தமிழ்மேல்
மன்னும் பெருமை மதித்தனை இலையே!

— இன்னும் உன்றன் மதஇழி வுகளைப்
பின்னும் மடமைப் பிணிஒழிந் திலையே!

—அன்ன வாறே அழுந்தி,நீ இருந்தே
என்ன வாருய் இழந்த பெருமையை
மீட்டிடப் போந்தனை? தமிழின மேன்மை
எட்டிடப் போந்தனை? எண்ணுக நன்றே!

---

## புயலும் கொடுமையும்.

அண்மையில் வீசிய புயலாலும் கொடும் வெள்ளப் பெருக்காலும் உயிர் நீத்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும், தத்தம் உடைமைகளையும் உறைவிடங்களையும் இழந்து தவிக்கும் நூறுயிரக்கணக்கான ஏழை எளியவர்களுக்கும் நம் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் தென்மொழிச் சார்பில் விரைவில் ஒரு நன்கொடையும் தொகுத்து அனுப்ப விருக்கின்றோம் என்றும் கூறிக்கொள்கின்றோம்.

ஆசிரியர்.

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!




சுவடி : 14 ஓலை : 7.

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]

தென்மொழி

இலக்கிய இதழ்

துலை–நளி தி. பி. ௨00அ-நவம்பர்-1977.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர் : மா. பூங்குன்றன். அறி.இ. (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை–5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]


# நேர்மையான அரசியலில் காழ்ப்புணர்ச்சிக்கே இடமில்லை!



இக்கால அரசியல் ஆளுமை பெரும்பாலும் ஒரு வாணிக அமைப்பாகவே நடத்தப் பெறுகிறது. பொதுநலவுணர்வு ஏதோ ஓர் அளவிற்கு இருக்கின்றது என்று சொல்லலாமே தவிர, நூற்றுக்கு எண்பது, தொண்ணூறு பங்குத் தந்நலவுணர்வோடு தான் அரசியல் ஈடுபாட்டாளர்கள் அனைவரும் இயங்குகின்றனர். இதில் ஏதோ ஒரு சிலரை நெறி விலக்காகச் சொல்லலாம் என்றாலும், அப்படிப்பட்டவர்களும் சில நேரங்களில் தங்களையறியாமல் அரசியல் சூழ்ச்சிகளில் சிக்கித் தங்கள் கருத்துகளையும் போக்கு களையும் நன்கு கைதேர்ந்த அரசியலாளர்களின் கருத்துகளோடும் போக்குகளோடும் இணைத்துக்கொள்ளத்தான் வேண்டியிருக்கின்றது. மொத்தத்தில், அரசியல் என்பது முற்றிலும் ஒருவகை ஏமாற்றுக்கலை யாகவே வளர்ந்திருப்பதுடன், அது நாட்டிலுள்ள பிற கலைகளையும் கல்வியமைப்புகளையும், தொழில்களையும், பொதுநல நிறுவனங் களையும், அவ்வவற்றின் தனிநிலை வளர்ச்சிகளுக்குத் துளியும் இடந் தராமல், தன்னுள் அடக்கிக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பதுமன்றி அவற்றைத் தன்னொடு கரைத்துக் கொண்டும் உள்ளது. இன்று, ஓர்

அரசியல்காரர்க்கு இருக்கும் மதிப்பும், சாய்காலும், மிகப்படித்துப் பட்டம்பெற்ற நிலையான பிற உயர்நிலை அதிகாரிகளுக்கும் அறிஞர்களுக்கும்கூட இருப்பதில்லை. அந்த அளவுக்கு அரசியல் அங்கிங் கெனுதபடி எங்கும் பேரொளியாய் நீக்கமற நின்று இயங்கிக் கொண்டுள்ளது என்றே சொல்லி விடலாம்.

இனி, இந்நிலைகளைப் பற்றியெல்லாம் நாம் ஏன் இத்துணைக் கவலையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது என்றால், ஒன்றும் அறியாத மக்களின் அறியாமையையும்,ஆசை அங்காப்புகளையும் பயன்படுத்திக் கொண்டு, அவர்களுக்கு நலஞ்செய்வதாகக் கூறி, இறுதிவரை, ஒருவர் மாற்றி ஒருவர் அவர்களை ஏமாற்றிக் கொண்டே உள்ளனரே என்பதாலும், அந்த மக்களும் கழுத்தறுத்துக் கூறுபோடும் கறிக் கடைக்காரனை நம்பும் ஆடுகள் போல, மேலும் மேலும் அத்தகைய ஏமாற்றுக் காரர்களையே நம்பி, நொடிக்கு நொடி தாழ்ந்திழிந்து வீணாய்ப் போய்க்கொண்டு இருக்கின்றனரே என்பதாலுந்தான்.

'அரசியல் என்பது ஓர் அறவியல்; எல்லாப் பொதுநலக் கூறுகளையெல்லாம் உள்ளடக்கிக் கொண்டுள்ள பெரும் பொது நலக்கூறு; அதன் தொண்டு இறைவன் தொண்டு; எனவே அரசனும் இறைவனும் ஒன்று; அரசே இறை; இறையே அரசு' என்றெல்லாம் நாம் எண்ணி இலக்கணம் பேசிக் கொண்டிருந்த காலம், குவடேறிக் குன்றேறி மலையேறி வானேறி வெட்ட வெளியாகி வெறும் பாழாய்ப் போய், இனி, அரசியல் அறமும் இல்லை, குடிமையறமும் இல்லை என்றாகி விட்டது. இத்துணைக்கும் நாம் மெத்தப் படிப்பதாக வாய்ப்பந்தல் போடுகிறோம்; மேலோங்கி விட்டதாய் நாய்க்கத்தல் கத்துகிறோம். இங்கிதனை எடுத்துக் கூறுவது, இந்த முடிவுக்கு நாம் இன்றுதான் வந்து விட்டோம் என்பதனாலன்று, என்றைக்கு நாம் 'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று, ஆடினோமோ, பள்ளுப் பாடினோமோ' அன்றைக்கே இந்த நாட்டின் அரசியல் நிலை இப்படித் தான் போகுமென்று நமக்குத் தெரியும். அதே போல், இன்று மக்கள் ஒருவர் மாற்றி ஒருவரிடம் எதிர்ப்பார்த்து, இறுதியில் இதற்கு அது மேல், அதற்கு இதுமேல் என்று அலைக்கழிக்கப் படுவதும், அல்லலுற்று வாடுவதுமாக உள்ளதை எண்ணுகையில் மனம் கசிந்து கழிவிரக்கம் கொள்கிறது.

ஆனால், அரசியல் புள்ளி விளத்தங்கள் பேசுகின்றன; அரசியல் தலைவர்களும் தம் அன்றாடக் கூட்டங்களிலும் விழாக்களிலும் வானளாவ வாய்வீச்சு வீசுகின்றனர், 'மக்கள் முன்னேறி விட்டனர்' என்று! ஆயினும், ஐயகோ, அன்றிருந்த சிற்றூர்ப் புறங்கள், ஓலைக் குடில்கள், பழங்கஞ்சிகள், பாடுபட்டுக் கொண்டே குமுறும் ஏழை உள்ளங்கள்—ஆகிய அனைத்தும் என்றும் இருந்தபடியே இன்றும் இருக்கின்றன! அன்றைக்கு எப்படிப் புயலாலும் வெள்ளத்தாலும் அவர்கள் காக்கப் பெறாமல் அழிந்தனரோ, இன்னும் அவ்வாறே அழிகின்றனர். அன்று எப்படி நகரங்களில் வாழும் கொள்ளையர் கூட்டங்கள், சிற்றூர்ப்புற ஏழை மக்களைச் சுரண்டி வாழ்ந்தனவோ, இன்றும் அப்படியே வாழ்ந்து வருகின்றன. இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவு என்ன, விடிவுதான் எப்பொழுது, என்று நம்போல் யாராகிலும்

ஒருவர் கேட்டால், உடனே புள்ளி விளக்கம் பேசுகிறது; அதிகாரி வானொலியிலும், தொலைக் காட்சியிலும் அளந்து (வெ)காட்டுகிறார்! அரசியல் தலைவர்களும் தொண்டர்களும் அறிக்கைமேல் அறிக்கைகள் விட்டு நம் போன்றவர்களின் வாய்களை நன்றாகக் கெட்டித்து மூடி விடுகின்றனர்.

இனி, இந்த நிலைகளுக்கெல்லாம் மேலாக ஓர் உண்மை வெட்ட வெளிச்சமாகத் தெரியத்தான் செய்கிறது! அஃது, இந்த நாட்டின் முப்பதாண்டுக்கால குடியரசாட்சிக்குப் பின்னும், மொத்தை மொத்தையான பல அரசியல் பொருளியல் திட்டங்களைப் போட்டுடைத்த பின்னும், கோடி கோடியான பணங்களை இங்குள்ள ஆறுகளிலும், மலைகளிலும், மண்மேடுகளிலும் கொட்டியளந்த பின்னும், அவை அணைகளாகவும், தோட்டங்களாகவும், தொழிற்சாலைகளாகவும் உரு மாறியமைந்த பின்னும்—இங்குள்ள பணக்காரர்கள் மேலும் மேலும் பணக்காரர்களாகவும் ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகவுமே மாறிக்கொண்டு போகின்றனர் என்பது தான்! அஃது ஏன்? ஒருவேளை குடியரசமைப்பு என்பதும், பெரும்பான்மையர் ஆட்சி என்பதும், குடி மக்களெல்லாம் சேர்ந்து, இங்குள்ள பெரும்பான்மை மக்களெல்லாம் சேர்ந்து ஒரு சிலரை—ஒருசில பணக்காரக் குடும்பங்களை மட்டும் என்றென்றும் வளமான ஏந்துகளுடன் வாழவைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதுதானோ? குடியரசமைப்பு என்பதை இப்படித்தான் நம்மால் செய்ய முடியும் என்ற நிலையிருக்குமானால், இந்நாட்டை ஒட்டு மொத்தமாக, ஒரு முற்றதிகார ஆட்சியின் கீழ் ஒப்படைத்து விடுவதேகூட நல்லதாகப் படுகிறது. அக்கால், இப்பொழுதிருப்பதை விட, பெரிய பெரிய தவறுகளோ கொடுமைகளோ நேர்ந்துவிடும் என்று எவரும் கூறிவிட முடியாது.

இனி, இவற்றைப்பற்றியெல்லாம் துளியும் கவலைப்படாமல், இங்குள்ள அரசியல் தலைவர்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டை ஆள்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இந்நிலப் பகுதியை ஒரு குழப்பக் காடாக மாற்றியுள்ளனர் என்று நினைக்கும் பொழுது, நமக்குப் பெரும் வருத்தமாக உள்ளது. கடந்த ஐந்தாறு மாத ஆட்சிக் காலத்தில் இவர்கள் செய்தவெல்லாம், இவர்களுக்கு முன்னிருந்த ஆட்சியாளர்களை எப்படியெல்லாம் திட்டமிட்டு மேலும் தலையெடுக்க விடாதபடி ஒடுக்கவேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளே! இவர்கள், இவற்றிலேயே தம் முழுக் கவனங்களையும் செலுத்தி வருகின்றனர் என்பது, கடந்த ஓரிரு மாதங்களின் செயற்பாடுகளி லிருந்து நன்கு புலப்படுகிறது. இந்நாட்டின் ஒட்டு மொத்தமான குற்றங்களுக்கும் கொடுமைகளுக்குமே புகலிடமாகி நிற்கும் இந்திரா காந்தி யென்னும் ஓர் அரசியல் கொலைக்குற்றவாளிக்குத் துணையாக நின்றிருந்து, அந்த அம்மையாரின் வருகைக்கு இந்நாட்டு மக்களின் வெறுப்பைக் காட்டுகின்ற முறையில், இங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கருப்புக்கொடி காட்டினர் என்பதைச் சாக்காகக் கொண்டு, அவர்களின் தலைவர் உள்ளிட்ட ஆயிரக்கணக் கான தொண்டர்களைக் கொலைக் குற்றவாளிகளாக்கிக் காட்டி அவர் களைக்கொடுஞ்சிறைக்குள் தள்ளியிருக்கின்றனர் என்றால், இவர்களின் அரசியல் நேர்மையின்மையை எப்படி வரவேற்பது? கட்சியரசியல்

என்பது, ஒரு கட்சி பிறிதொரு கட்சியை ஒழித்துக்கட்டும் அதிகார முயற்சிதான் என்று பொருள் படும்படி இவர்கள் நடந்து கொள்வார்களானால், இவர்கள் எப்படித் தமக்குள்ள ஐந்தாண்டுக்கால ஆட்சி வாய்ப்பில், தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மைகள் செய்துவிட முடியும்? அவற்றிற்கெங்கே நேரமிருக்கின்றது?

அ.இ.அ.தி.மு.க தலைவரும், இத் தமிழ்நாட்டின் முதலமைச்சரும் ஆகிய திரு. ம. கோ. இராமச்சந்திரன் அவர்கள் திரவிட இயல் கோட்பாட்டைக் கடைப்பிடிக்கும் கொள்கையுணர்ச்சி உள்ளவராக இருக்க வேண்டும் என்று நாம் வேண்டினோம்; வரவேற்றோம். ஆனால், தாம அதற்கு முற்றும் மாறான அல்லது வேறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் தமக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை என்பதை மெய்ப்பிக்கும் வகையில், அவர் நடவடிக்கைகளில் இறங்கி இருப்பதற்காக மிகவும் வருந்துகின்றோம். அவர் இந்திராவின் பார்ப்பனியப் பிடியிலிருந்து என்றென்றும் மீளமுடியாதபடி தம்மைச் சிக்க வைத்துக் கொண்டுள்ள இரங்கத்தக்க நிலை உண்மையாகவே இருக்குமானால், அவர் போக்கில் தமிழர்க்கும், தமிழ்மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் ஒரு சிறிதளவேனும் விடிவு ஏற்பட்டு விடும் என்று நாம் எதிர்பார்ப்பது வெறும் ஏமாற்றமாகவே முடிந்துவிடக்கூடும் என்று நாம் அஞ்ச வேண்டியுள்ளது.

இனி, இன்று, தமிழ்நாட்டில் மட்டுமன்று, இந்தியா முழுவதிலுமே, அரசியல், பொருளியல், குமுகவியல், கலை, பண்பாடு—ஆகிய அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனியமும் இந்துமதமுமே கோலோச்சி நிற்கின்றன! இத்துறைகளில் பிற இனத்தினர், குறிப்பாகத் திரவிட இனத்தினர், இன்னும் குறிப்பாகத் தமிழர், எந்தத் துறையிலும் மேம்பட்டு எழுச்சியுறாதபடி, ஆரியம் வழிமறித்துக் கொண்டுள்ளது. ஒரோவொருகால், தமிழர்களோ, பிற திரவிட இனத்தினரோ அத்துறைகளைக் கைப்பற்றுகின்ற வாய்ப்பு ஏற்படுமானால், அந்நிலையிலும் அவர்கள் பார்ப்பனிய மேலிடங்களுக்கு மாறாக இயங்க முடிவதில்லை. இனி, இதற்கு மாறாக, அவர்கள் தங்கள் பட்டங்களையும் பதவிகளையும் காத்துக்கொள்ள வேண்டி, பார்ப்பனியத்திற்கு அடிமைப்படவும் வேண்டியிருக்கின்றது. இம் மாறாத உண்மைக்கு வேறாக நடக்கும் ஓரதிகாரியையோ, அரசியல் தலைவரையோ தமிழகத்தில் பார்க்க முடிவதில்லை. அவர்கள் அனைவரும் ஆரிய அடிமைகளாகவே உள்ளனர். இந்நிலைகளினின்று இந்நாட்டின் நிலையான காட்டிக் கொடுப்பான்களாக உள்ள பக்தவத்சலங்களும், சுப்பிரமணியன்களும், மா. பொ. சி-க்களும், மூப்பன்களும், கண்ணதாசன்களும் பிற வீடணப் பிரகலாதன்களும் என்றென்றைக்கும் மீளவே முடியாது. இந்நிலையில், ம. கோ. இராமச்சந்திரனும் அப்படித்தான் நடந்து கொண்டு, இங்குள்ள நாலரைக் கோடித் தமிழினத்தின் முன்னேற்றத்திற்காகவும் கட்டியங்கூறி நிற்கும் ஒரே ஒரு தலைவனையும், அவன் வழியினரையும் சிதைத்துவிட, அல்லது சீரழித்துவிட முற்படுவாரானால், அவர் அரசியல் தமிழ்ப் பற்றென்னும் திரைப்பட நடிப்பை இங்குள்ள தமிழர்கள் விரைவில் விளங்கிக் கொண்டுவிட முடியும் என்று அவர்க்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

கலைஞர் செய்துள்ளதாகப் பறைசாற்றப்பெறும் அரசியல் குற்றங்கள், இந்திராகாந்தியின் மலையளவு குற்றங்களின்முன் ஒரு சிறிய மண்ணாங்கட்டியின் அளவே! இவ்விந்திய நாட்டின் கம்பிச் சிறைக்குள் நீண்ட நெடுங்காலம் அடைபட்டுக் கிடக்கும் வேறெந்தக் குற்றவாளியையும்விட, அவ்வம்மையாரும், அவரின் நீண்ட நெடிய அரசியல் பரிவாரங்களும் குறைவான குற்றங்களைச் செய்துவிட வில்லை. அப்படியிருந்தும் அவரால் எப்படி வெளியே தலைகாட்ட முடிகிறது? அவர் நேருவின் மகள் என்பதாலா? மக்கள் விரும்பும் ஒரு பெருந்தலைவர் என்பதாலா? இல்லை; இங்குதான், மறைந்துநின்று இயங்கும் பார்ப்பனீயத்தின் உண்மை வலிவை உணர்ந்து கொள்ள வேண்டும். அத்தகைய நிலையில் அவ்வம்மையாருக்கு வேறு எந்த மாநிலத்திலும் அளிக்கப்பெறாத வகையில் காப்புச் செய்து தருவதும், 'அவர் வரவை விரும்பவில்லை' என்னும் குறிப்புக் காட்டும் வகையில் மக்களாட்சி முறையில் கருப்புக்கொடி காட்டியதற்காகத், தமிழின மரபைக் கட்டிக் காக்கத் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக்கொண்ட ஒரு கட்சித்தலைவர் மேல் கொலைக் குற்றஞ்சாட்டிக் கொடுஞ்சிறையுள் வைப்பதும், தம் அரசியல் காழ்ப்புணர்ச்சியையும் ஆரிய அடிமைத் தனத்தையும், தமிழினப் பகையையுமே காட்டுவதன்றி, எவ்வகை யானும், ம. கோ. இராவின் அரசியல் ஆளுமைத் திறத்தையோ, நேர்மையையோ காட்டிவிடப் போவதில்லை. நேர்மையான அரசியலில் கட்சிக் காழ்ப்புணர்ச்சிக்கே இடமிருக்கக் கூடாது.

எனவே, இன்று ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர், தமிழ்மொழிக்கும்,தமிழினத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் தாங்கள் இன்னும் ஒருதுளி நன்மையும் செய்யாத நிலையில், கடந்த கால தி.மு.க. ஆட்சியில் துணிந்து அம் மூவழிகளிலும் ஓரளவு நன்மை செய்த ஒரு கட்சியை அழித்து விடுவதற்கான சூழ்ச்சி வலை விரித்திருப்பது, அதிலேயே அவர்களைச் சிக்கவைத்துக் கொள்ளும் ஒரு முயற்சியாக இருக்குமே தவிர, வேறாக இருக்கவே முடியாது என்று எச்சரித்துக் கூறுகின்றோம்.

இனி, இத்தகைய அரசியல் சூழ்ச்சிகளிலெல்லாம் ஈடுபடாமல், இவ்வினத்திற்கும் நாட்டிற்கும் மொழிக்கும் அவர்கள் செய்வதாக மக்கள் முன் கொடுத்துள்ள உறுதி மொழிகளையும், தாமே விரும்பி அறிவித்துள்ள கொள்கைகளையும் செய்து முடிப்பதில் தம் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும் என்று கூறிக்கொள்வதுடன், பொய் வழக்குகளாலும் போலிக் குற்றச் சாட்டுகளாலும் தளைப் படுத்தப் பெற்றிருக்கும் தமிழினத் தலைவர்களை அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்யும் வகையில் உடனே விடுவிப்புச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.



# பாவாணர் தொடர்பு.

## ஒரு வேண்டுகோள்!

தமிழக அரசின், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித்துறை நெறியாளரும், ஈடு இணையற்ற திரவிட மொழிப் பேரறிஞரும் ஆகிய, செந்தமிழ் மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள், தம் முதுமையையும் பல்வகை ஏந்துக் குறைவையுங்கூடப் பொருட்படுத்தாமல், ஒரு நாளில் பெரும்பகுதி நேரமும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்குமெனவே தம் வாழ்நாளைப் பயன்படுத்தி வருவது தமிழன்பர்கள், பேராசிரியர்கள் அனைவரும் அறிந்ததே. இக்கால் அவர்களுக்கு 76 அகவை. இருப்பினும் அவர் பேச்சும் மூச்சும், நடையும் நாட்டமும், இன்னுஞ் சொன்னால் அவரின் ஒரு சிறு அசைவும் கூட, தூய தமிழாகவும், தமிழுக்காகவுமே இருந்து வருவதை, அவரை நெருங்கிப் பார்த்த பலரும் உணர்வர்.


தம் வாழ்நாளைத் தமிழுக்காகவே ஈடுபடுத்திய அறிஞர்கள் சிலரை நான் பார்த்திருக்கின்றேன்; படித்திருக்கின்றேன்; பழகியுமிருக்கின்றேன். அதேபோல், பாவாணரொடும் கடந்த முப்பதாண்டுகளாக, நான் ஒரு தமிழ் ஆர்வலனாகவும் மாணவனாகவும் உதவியாளனாகவும் நண்பனாகவும் இருந்து மிக நெருங்கிப் பழகி வந்திருக்கின்றேன்; வருகின்றேன். அவ்வகையில், பாவாணரைப்போல், ஒரு நாளின் முழு நேரமும்—தம் உடலணுக்கள் முழுமையும்—தமிழாகவே இயங்கிய ஓர் அறிஞரை—புலவரை—பேராசிரியரை—தமிழ்த் தொண்டரை—இதுவரையில் நான் பார்த்ததுமில்லை; படித்ததுமில்லை; கேட்டதுமில்லை. பாவாணரையும் என்னையும் அறிந்தவர்களுக்கு இக்கூற்று ஒரு சிறிதும் மிகையாகப் படாதென்றே கருதுகின்றேன். அந்த அளவில் பாவாணர் அவர்கள், கடந்த காலங்களில் வேறு எவருமே ஈடுபடாத அளவில்—முறையில்—மிகவும் பரபரப்பும் ஆரவாரமும், அதிகார விழைவும், விளம்பர வெறியும் நிறைந்த இத்தமிழ் மண்ணில், இழிவும் இரைச்சலும் நிறைந்த சென்னையில், புறநகர் ஒன்றில் ஒரு சிறு வாடகை வீட்டில், ஒரு சின்னஞ்சிறு அறையில், தாம் அரும்பாடுபட்டுச் சேர்த்துக் குவித்த அரிய நூற் குவியல்களுக்கிடையில், வெளியுலக வானமே தெரியாதபடி, மிகவும் அடக்கமும் அமைதியாகவும் இருந்து கொண்டு, அறிஞர்களுக்கே உள்ள எளிமையான முறையில், வேறெதிலும் துளிக் கவனமும் செலுத்தாமல், தம் இறுதிக் காலத்தில் தமிழக அரசு தம்மிடம் ஒப்படைத்த சொற்பிறப்பியல் அகர முதலிப் பணியை, மிக ஆழமாகவும் விரிவாகவும், தம் நுண் மாண் நுழைபுலம் முற்றும் புலப்படும் வகையில், மிகவும் விரைவாகவும் விருப்பமாகவும் செய்துகொண்டு வருகின்றார்கள்.

இந்நிலையில் அவரின் ஒவ்வொரு நொடிப் பொழுதும் மிகமிக இன்றியமையாததாகவும், இடத்திற்கும் காலத்திற்கும் அப்பாற்பட்ட இனப்பயனும் மொழிப்பயனும் கொண்டதாகவும் இருந்து வருகின்றது.

எனவே, அவரை முன்போல் கருதிக் கொண்டு, அவரிடம் அன்பர்கள் மடல் தொடர்பு கொள்வதும், விடைகளுக்காகவும், கருத்துகளுக்காகவும், வாழ்த்துகளுக்காகவும், வினுக்கள் தொடுப்பதும், கருத்துரைகள் கேட்பதும், தமிழ் விழா, மணவிழா அழைப்புகள் அனுப்புவதும், அவற்றிற்கு வந்து போக அழைப்பதும், காலையென்றும் மாலையென்றும் இரவென்றும் பாராமல், திடுமெனப் புறப்பட்டு நேரில் வந்து, அவர் மேல் வைத்த அன்பும் மதிப்பும் காரணியமாகவும், விடாப்பிடியாகவும் சில, பல மணிநேரங்களை வீணுக்குவதும், அவர்கள் மேற்கொண்டிருக்கும் மிகப்பெரும் அறிவுப் பணிக்குப் பெரிதும் இடையீறு தருவனவாகும்.

ஆகவே, பொது நலங்கருதி, அன்பர்கள் இனிமேல் பாவாணர் அவர்களுக்குக் கருத்து வேண்டியும் வாழ்த்து வேண்டியும் அழைத்தல் வேண்டியும் எவரும் எதன் தொடர்பாகவும் எவ்வகை மடலும் விடுக்க வேண்டாவென்றும், அவரை முன்னிசைவின்றி எவரும் வந்து பார்த்துப் பேசித் தொல்லை கொடுக்க வேண்டாவென்றும் அன்பொடு வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றியமையாமை பற்றிப் பாவாணர் அவர்களை நேரில் பார்க்கவும் சிறிதுநேரம் பேசவும் விரும்புவார், இனி, தென்மொழிக்கு எழுதி, முன்னிசைவு பெற்று, பாவாணர் கருத்தறிந்து நேர ஒதுக்கீடு செய்து கொடுத்தபின் நேரில் வந்து காணுமாறும், அருள் கனிந்து இவ்வேண்டுகோளைத் தவறாமல் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.



# சென்னை, உ.த.க. மாநாடு ஒத்திவைப்பு.

## (இறுதிநிலை அறிக்கை)

அண்மையில் தமிழகத்தில் ஏற்பட்ட புயல் கொடுமைகளாலும், அதன்வழி மக்களுக்கு நேர்ந்த பேரிழப்புகளாலும், வேறு சில அரசியல் சூழல்களாலும் திசம்பரில் நடைபெறவிருந்த உ.த.க. பொது மாநாடு அடுத்த ஆண்டு சனவரி மாதத்திற்கு ஒத்தி வைக்கப் பெறுகிறது. இடம், காலம் குறித்த அடுத்த அறிக்கை விரைவில் வெளியிடப்பெறும் என்று அறிவிக்கப் பெறுகிறது.

# உலகியல் நூறு.

—பெருஞ்சித்திரனார்—

[மொழிபெயர்ப்பு: த. முத்துக்குமரன், க. இ.]

## 17. பிறப்பியல்

### I. உடல் நுகர்ச்சி நிலை.

விழிமின்பாய்ந் துள்வெதுப்ப வேண்மதநீர் ஓடிக்
கழிபெருநற் காமம் கனப்பப்—பொழியன்பால்
சொல்லிதழ்க்கை மொய்த்தூர்ந்துள் ஒத்துச் சுரப்பாடி
வல்லுறுத்துத் துய்த்தல் வரைத்து.

பொழிப்பு: விழிகள் ஒன்றையொன்று கவ்வும் நோக்கினால் தோன்றிய மின் தாக்குதல் போலும் ஒருணர்வு ஊடுருவி, இணையத் தக்க ஆணும் பெண்ணுமாகிய இருவரின் உள்ளத்தையும் உடலையும் வெதும்பலுறச்செய்ய, வேட்கை மதர்ந்த செந்நீர் இருவரின் நாடி நரம்புகளின் முழுதும் பாய்ந்தோடி, மிகவும் பெருகிய நல்ல காம வுணர்வைக் கனலுறச் செய்ய, ஒருவரையொருவர் நெருங்கி, அன்பு பொழியும் உணர்வுடன் சொற்களையும், வாயிதழ்களையும், கைகளையும் ஒருவர்மேல் ஒருவர் மொய்க்கச் செய்து, மேலிட்டுத் தழுவி உள்ளுணர்வும் உறுப்புகளும் ஒத்துச் சுரக்கும் நிலையில் அசைந்து கூடி, வலிமையொடு உறுத்துத் துய்க்கின்ற இன்பம், அளவொடு நிகழத் தக்கதாகும். (81)

## 17. ON BIRTH

### I. ON BODILY FEELING.

Eye's current scorching hearts, arousing
Love to a pitch, both exciting,
Unites them in word and deed fine.
In harmony as their life's gain. (81)

With the darting eyes that catch each other sending current-like feeling, exciting the heart and body of the two of either sex to such a pitch that there is a rush of red blood in every vessel and nerve that in outward expression thereof they approach each other, passionately talk, kiss and embrace. When the internal and external organs meet and are in unison, the pleasure sought for should be within limits.

## உ. கரு நிலை.

வித்துசினை ஒன்றித்தாய் வேதுநீர் உள்வாங்கிப்
பத்துமதி தாங்கிப் படர்ந்து—முத்தவிழ்ப்பாய்
வாழும் உலகியற்கு வாய்த்த உறுப்புணர்வால்
வீழும் வியப்பே வியப்பு.

பொழிப்பு: ஆணின் வித்தும், பெண்ணின் சினையும் பொருந்தித், தாயினது வெப்பமான அகட்டு நீரை உள் சுவறிக் கொண்டு, பத்து மாதங்கள் உயிரைத் தாங்கியிருந்து, உருவம் மேவப் பெற்று முதிர்ந்து, சிப்பியினின்று மூத்து அவிழ்வது போல், தான் உயிர்மெய்யாய் வாழப் போகும் உலக இயல்புகளுக்கு ஒத்த வகையில், உள் உறுப்புகளொடும் அவற்றிற்கேற்ற உணர்வுகளொடும், இம்மண்ணில் வீழ்கின்ற வியத்தகு வினையே மிகவும் வியப்புக்குரியதாகும். (82)

## 2. ON EMBRYOGENESIS.

Semen, ova in womb combine,
Grow up for ten months like pearl fine,
Comes with right limbs for life in world
As wonder of wonders! Behold! (82)

The seminal fluid of the male and the ova of the female combine in the womb, absorb the mother's warm internal secretions, develop properly therein for full ten months. When the time is ripe, like a fine child comes out with all limbs full, for life in the world, in a manner which is really wonderful to behold.

## ௩. உரு நிலை.

உடல்பொருந்தி அற்றுங் குளம்பொருந்தி ஒருந்
திடல்பொருந்தித் தேவை தெளிந்து—கடலுலகில்
ஏய்ந்த பருப்பொருளுக் கேற்ப வளருமே
வாய்ந்த உயிர்மலர வந்து.

பொழிப்பு: உலகியலுக்கு ஒத்த உடலம் பொருந்தி, அவ் வளவில் அங்ஙனே உள்ளமும் பொருந்தி, நுகர்ந்தறியும் திறனும் அதனுட் பொருந்தி, தனக்குற்ற தேவைகளைத் தானே தேர்ந்து

தெளிந்து கொண்டு, கடல் சூழ்ந்த இவ்வுலகில் நிறைந்து விளங்கும் பருப்பொருள்களுக்கேற்ற வகையில், வாய்ப்பினுல் வந்து தங்கிய உயிரானது மலர்ந்து வளர்தலுறும். (83)

### 3. ON FORMATION.

Body fit for life in world to drift
With might and the right thought to sift
Amidst objects full in the world
The new life blossoms forth its fold. (83)

With a body fitted for the nature of the world and also with a heart to suit with the capacity to feel enjoyment, choosing and picking out things required for the self and in a way to be in accord with the concrete things that abound in the sea-bound world, the life that had the chance to rest blossoms forth and grows.

### 4. திரு நிலே.

பரந்த நினைவின் படிநிலேக்கு வாங்கிச்
சுரந்த நினைவு சொரிந்து—கரந்தொளிர்ந்த
உட்புலன்கள் தேர உடல்பொருந்த வீறூர்ந்து
பெட்புநலன் துய்த்தல் பெரிது.

பொழிப்பு: எங்கும் பரந்து நிற்கும் நினைவு வெளியில் அலேயும் நினைவுகளே, படிந்த உணர்வு நிலேகளுக்குத் தக்கவாறு, உள்ளத்தால் வாங்கி, அவற்றுல் தானும் சுரக்கின்ற நினைவுகளே உலக நிலேகளுக்கேற்ப வெளிப்படுத்தி, மறைவாக விளங்கி நிற்கும் அக அறிவு நிலேகள் வளரும்படி தன் உடல் கூறுகளுக்கு ஒத்த வகையில் வீறுபெற எழுந்து நின்று, உயிரானது, இவ்வுலக வியற்கையின் இயல்பு நலன்களேப் பெரிதும் துய்க்கும். (84)

### 4. ON EMINENCE.

Receive such waves in air and bring
Your own to suit environs ring,
Improve senses accord with form
Enjoy world goods in full as norm (84)

In the atmosphere of thought spread all about us there are thought waves. Receiving such of the thought waves as would suit the internal feelings a life reveals the thoughts aroused by the reception so as to aid the growth of the internal intellectual stages and agreeable to the various limbs of the physical body. This is how life enjoys the various objective benefits that abound in the world.

### 5. புதுமை நிலை.

நுகர்ச்சி பழமை நுகர்வுபுதி தென்ப
முகிழ்ச்சி தன்னுணர்வால் மொய்க்கும்—இகழ்ச்சி
இவணில்லை ஏற்ற துயர்வென்றே எண்ணும்
கவண்முகத் தூடுருவுங் கல்!

பொழிப்பு : உயிர்க்கு உற்ற நுகர்ச்சி நிலையறிவு பழையதும், அதால் நுகர்கின்ற நுகர்வு நிலைகள் புதியனவும் ஆகும் என்றுரைப்பர். அவ்வாறு புதிய நிலைகளை நுகருங்கால், அவற்றின் முகிழ்க்கின்ற உணர்வு நிலைகள், தன்னின் பழைய உணர்வுகளின் அளவடிப் படையில் அவ்வுயிர்க்கு வந்து நிறையும். உயிரளவான் இகழத்தக்க நிலைகள் இவ்வுலகின்கண் ஒன்றும் இல்லையாகலான், தான் ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு நிலையும் தன் நிலையை உயர்த்து கின்ற நிலையே என்று எண்ணி நுகரும். கவணின் முகத்தினின்று ஊடுருவிப் பாயும் கல்போல் அவ்வுயிர் ஒன்றின் தோய்ந்து அதனின்று நீங்கி ஒன்றை நோக்கிப் பாயும் பெற்றியதாம். (85)

### 5. ON NEWNESS.

Feeling is old, enjoyment new,
Self feels replica of old crew.
Enjoys each in journey as lift,
As a stone from a catabelt swift. (85)

Old is the feeling of the senses but enjoyment is new, as they say. In the new state enjoyment comes to life in the accustomed old way to the full. So far as life goes, no stage is high or low and there is nothing to be ashamed of. When it comes to any stage, it takes it as a stage meant to lift it up. Thus it goes on to its target like the swift stone released from the catabelt.

[சுவடி: 14, ஓலை: 3 இதழின் தொடர்ச்சி.]

# திருவள்ளுவர் யார்?

சேலம், புலவர் க. நடேசனார்

எழுத்தெல்லாம் அகரத்தைத் தமக்குக் காரணமாகக் கொண்டுள்ளன (எழுத்தெல்லாம் அகரமுதல) என்று கூறியபின்,

*"ஆதிபகவன் முதற்றே உலகு"*

என்று முடிக்கின்றார் வள்ளுவர். இதன் பொருள், 'அந்த அகரத்துக்கு ஆதியான பகவனையே உலகம் தனக்குக் காரணமாகக் கொண்டுளது' என்பதாம். பகவன் அகர காரணன் ஆதல் எப்படி? நாததத்துவத்தை இயக்குவதால் அகர காரணன் பகவன் என்பது முன்னரே விளக்கப்பட்டுள்ளது. எனவே, திருக்குறள் முதற்செய்யுளின் சொற்பொருள்:—எழுத்தெல்லாம்—கருத்தறிவிக்கும் சொல்லுக்குக் காரணமான எழுத்தோசை எல்லாம், அகரமுதல—அகர ஓசையைத் தமக்குக் காரணமாக உடையன எனின், ஆதி—இவ்வகர ஓசைக்குக் காரணமான, பகவன்—கடவுளையே, உலகம் முதற்று—உலகம் தனக்குக் காரணமாக உடையது; கொண்டுளது.

விளக்கம்:—ஆதி, முதல், காரணம் என்பன ஒரு பொருட் சொற்கள். சொல்லுலகத்துக்கும் பொருளுலகத்துக்கும் பகவன் காரணன் என்பது கருத்து. பகவு + அன் = பகவன்; தத்துவப் பகவுகளையும் உயிர்ப்பகுதிகளையும் உடையவன் பகவன்; தத்துவம், புவனம், கலை, மந்திரம், பதம், வன்னம் ஆகிய பகுதிகள் பலவற்றையும் அடக்கிக்கொண்டுள்ளவன் பகவன்; இப்பகவெல்லாம் ஒடுங்குதற்கிடமான இலயசிவம் பகவன் எனக்காரணம் கண்டு கொள்க. 'பகவன்' என்பதை வடசொல்லென்பாரும் உண்டு. எதுவாயினும் இங்குப் பொருள் இழுக்காது. எழுத்துக் காரணம் அகர ஒலி எனின், அவ்வொலிக்குக் காரணமான பகவனே உலக காரணன் என இரு வாக்கியத்துக்கும் இடையில் 'எனின்' என்று ஒரு சொல் வருவித்து இயைபு படுத்திக்கொள்க. இங்ஙனம் கொள்வது பொருள் கோள் முறையுள் ஒன்று. இதனை,

*"வானோக்கி வாழும் உலகெலாம் மன்னவன்*
*கோல்நோக்கி வாழும் குடி"* (542)

என்பதற்குப் பரிமேலழகர் கூறிய உரையால் அறிக. அச்செய்யுளை எடுத்துக் காட்டுவமையாகக் கொண்டிலர் பரிமேலழகர். இம்முதற்

குறளும் அதைப்போன்ற அமைப்புடையதே. ஆதலின், இதனையும் எடுத்துக் காட்டுவமையாகக் கொள்ளாமல் இங்ஙனம் பொருளுரைத்துக் கொள்க. இப்படிக் கொள்வதால் மறைநூல் மரபையொட்டி உலக உற்பத்தி கூறியதாகவும் முடியும். கடவுள் சிறப் புணர்த்தியதாகவும் முடிந்து சிறப்புறும். வள்ளுவர் உலக உற்பத்திக்கு நாத முதலாக 36 தத்துவ முறையை ஏற்றுக்கொண்டவர் என்பதும் இதனால் கண்டு கொள்ளலாம். எனவே பிருகிருதி முதலாக 25 தத்துவ முறையை ஏலாதவர்; பிரகிருதிப்பிரேரக நாராயணன், உலக காரணன் அல்லன்; நாதப் பிரேரக சிவனே உலக காரணனென ஏற்றவர் வள்ளுவர் என்பதும் தெளியப்படும். நாதவிந்துக் கலைகளிலிருந்தும் அகரத்திலிருந்தும் தத்துவத் தொடக்கமும் உலக உற்பத்தியும் கொள்வதைத் தென்னெறிச் சைவ நூல்களில் பலவிடங்களில் காணலாம். இதை,

> *"நாதாதி மூன்றும் மூலசித்தும் புணர்ந்தாகும் சோதிமயமாலிங்கம். மாலிங்கத்து அகராதி ஆகி, அவை கூடித்தகவாம் ஓங்காரச் சதாசிவமாம்"* (*சிவப்பிரகாசர்*)

எனவருவது கொண்டும் அறியலாம். இங்ஙனமே 'நிரஞ்சனமாலை' என்னும் தென்னெறிச் சிறப்பு நூலொன்றின் முதற்பாட்டிலும்,

> *"தனிமுதல் நிட்களமாகி, அந்நிட்களத்தில் வரும் சிவசித்து சிந்நாதம் விந்துகலை மன்னி ஒன்றாய், அருஞ்சுடராய், அகராதிப் பிரணவம் ஆகி நின்று சகம்யாவும் தரும்"*

என வரல் காண்க. இம் முதற்பாட்டு, 'அகரமுதல' எனத் தொடங்கும் திருக்குறள் முதற்பாட்டின் விரிவுரையேயாய், விளக்கமேயாய்த் திகழ்வதும் காண்க. இவற்றை எல்லாம் ஆய்ந்துணர வல்லார்க்குத் திருக்குறள் முதற்பாட்டு, இங்ஙனமன்றி வேறு பொருள் தராது என்பதும் புலப்படும். குறள் முதற்பாட்டில் சிவதத்துவம் ஐந்தனுள் நாதம், விந்து, சதாசிவம் என்னும் தத்துவங்கள் மூன்றும் குறிக்கப்படுதல் அட்டவணை நோக்கியும் காண்க. இத்தத்துவங்கட்குக் காரணமாகிய தனி முதற்பொருள்—கடவுள்—சிவாகம நூல்களில் 'ஆதி பகவன்' என்னும் பெயராலேயே குறிக்கப்படுவதும் உண்டு.

> 'ஆதி பகவன் என் *பெயர்புனைந்த பரம சிந்மயலிங்கம்'*
>
> (*சித்தாந்த சிகாமணி—இலிங்கதாரணத்தலம். 7.*)

என்பதும் காண்க. இச்சங்கிருதச் சித்தாந்த சிகாமணி நூலாசிரியர் கி. பி. முதல் நூற்றாண்டு இரண்டாம் நூற்றாண்டுகளோடு தொடர்

புற்ற காலத்தவரெனவும் திரவிட நாட்டுத் தொடர்புடையவரெனவும் காசி நாத சாத்திரியார் அந்நூல் முகவுரையுள் குறிப்பிடுவர். இந் நூலில் காமிகம் முதலிய ஆகமப் பெயர்களும், சிவதத்துவ, வித்தியா தத்துவ, ஆன்ம தத்துவ வகைகளும் குறிக்கப்பட்டுள்ளன. இதனால் தென்னாகமச் சிவதத்துவங்களின் பழமை விளங்கும் என முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இம் முதற் குறளில் குறிக்கப்படும் பகவன், பிரகிருதிப்பிரேரக நாரணன் அல்லன் என்பதும், நாதப்பிரேரகச் சிவனே என்பதும், இதில் சிவதத்துவங்களுள் 3 குறிக்கப்பட்டுள்ளன என்பதும், கடவுள் வாழ்த்து அதிகாரத்திலும் 'நீத்தார் பெருமை' அதிகாரத்திலும் வரும் பிற குறட்பாக்களின் ஆராய்ச்சியாலும் உறுதிப்படும்; தெளிவாகும்.

வைணவ நூல்களில் அவிபக்ததமசு—அட்சராவத்தை—என ஒன்று கூறப்படினும் அதன் போக்கும் பொருளும் வேறு. 'அகாரோ விஷ்ணு ப்ரதம நாமோசயதே' என்றாற்போல, சைனர்களும் தமது ஆசிரியரின் பெயரான 'அருகர்' என்பதில் 'அ' எழுத்து முன்னுள்ள தெனக் கொண்டு இதனைத் தம் தியான மந்திரங்களில் அமைத்துப் போற்றுவர். என்றாலும் இவர்களெல்லாம் நாததத்துவத்தைத் தம் தம் தத்துவ முறையுள் சேர்த்துத் தொகை கொடுத்து எண்ணி மெய்ப் பொருள் விளக்கமும் உலகத் தோற்ற ஒடுக்கங்களும் கூறும் நியதி உடையவரல்லர். இந்நியதி சிவாகமங்கட்கே உரியது. சங்கிருத வேத மந்திரங்கள்கூடப் பிரணவத்தோடு தொடங்கப்படுதலின், வைதிகரும் அகரத்துக்கு உரிமை கொள்வர். இது, ஆகமங்களி லிருந்து பெற்ற இரவல் உரிமை என இக்காலத்து ஆராய்ச்சிகளால் விளக்கமுற்று வருகிறது. எனவே அகரததையும் நாதத்துவத்தையும் உலகத்தோற்றத்துக்கு ஆதாரமாகக் கொள்ளும் சிறப்பு மரபு சிவாக மங்கட்கே உரியது.

பிரகிருதி தத்துவப் பிரேரகன்—பகுதியை இயக்குவோன்—நாரணன் என்பவர்க்குத் தத்துவத்தொகை 25 அல்லது 26. நாத தத்துவப் பிரேரகன் சிவன் என்பார்க்குத் தத்துவத்தொகை 36. இந்த முப்பத்தாறு தத்துவங்களுள் 'சுத்த வித்தை' என்பதும் ஒன்று. சுத்த வித்தை என்னும் இதனைத் 'தூய அறிவு' என மொழி பெயர்த்துக் கூறுவர் மறைமலை அடிகள் (சிவஞானபோத ஆராய்ச்சி. பக். 207). சுத்த விததையை வள்ளுவர் 'வாலறிவம்' எனக் கொள்ளுவர்; சுத்த வித்தையின் முதல்வனை 'வாலறிவன்' (2) எனக்குறிப்பது காண்க. தூயறிவு, வாலறிவு, சுத்தவித்தை என்பன

ஒரு பொருட் சொற்கள். இதுவரை கூறியது கொண்டு, வாலறிவன் என்று இரண்டாவது குறட்பாவில் குறிக்கப்படும் கடவுள், சுத்த வித்தை எனப்படும் சிவதத்துவ முதல்வன் என்பதை நல்லறிஞர் யாரும் ஏற்பர். இரண்டாவது குறளில் கூறப்படும் வாலறிவன் சிவனுகவே, முதற்குறளில் கூறப்படும் 'பகவனும்' சிவனே ஆதல் வேண்டும். இங்ஙனம் ஆதலின், முதற்குறளில் 'பகவன்' என் றமையின் நாதவிந்துக்களும் 'அகரம்' என்றமையின் சதாசிவ தத்துவமும் குறிக்கப்பட்டன. இரண்டாம் குறளில் சுத்தவித்தை—வாலறிவம்—என்னும் தத்துவம் குறிக்கப்பட்டது. எனவே, முதல் இரண்டு குறட்பாக்களில் சிவதத்துவங்கள் ஐந்தில் நான்கினைப் பற்றிய செய்திகள் குறிக்கப்பட்டுள்ளமை காண்க. மேற்செல்வோம்.

ஐந்தாவது குறளிலும் பத்தாவது குறளிலும் வரும் 'இறைவன்' என்ற பெயரும் நாராயணன் என்ற திருப்பெயரும் ஒரு பொருட் சொற்கள்; விஷ்ணு, வாசுதேவன் என்ற திருப்பெயர்களும் இப்பொரு ளனவேயாம் (விநோதன். பக் 33) என்றும், முதல் அத்தியாயம் பத்தாம் செய்யுளில் நாரணனைக் குறித்த மநுவைப் போலவே முதல் அதிகாரம்10–ஆம் குறளில்வள்ளுவரும் இறைவன் என நாரணனையே குறிக்கிருர்; எனவே இருவரும் பரம வைதிக வைணவப் பெருந் தகையார் என்றும் கருதுவர் வைணவரிற் சிலர். இதுவும் பொருந் தாது. ஏன்? சிவதத்துவங்கள் ஐந்தில் மயேசம் (ஈசுரம்) எனப் பெயர் பெறும் தத்துவம் ஒன்றுண்டு என்பதை அறிஞர் அறிவர். இத்தத்துவத்தில் முதல்வன், ஈசுவரன் (மயேசன்) என்னும் பெயரடைவன் என்று ஆகமங்கள் கூறும். மறைமலையடிகள் 'ஈசுவரன்' (மயேசன்) என்பதைத் 'தலைவன்' எனத் தமிழில் மொழி பெயர்த்துக் குறிப்பர். இதனை,

> "ஈசுவரன் எனினும் தலைவன் எனினும் ஒக்கும். இவராற் கலக்குண்ட பகுதியும் ஈசுவரதத்துவ மெனப் பெயர்பெறும். இவ்வீசுவர தத்துவத்தில் தலைவன் எனப் பெயர் பெற்று நிற்கும் கடவுட்கும், இதற்குமேல் சத்தி, சிவம் (விந்து, நாதம்) என்னும் தத்துவங்களில் நிற்கும் கடவுட்கும் எவ்வாற்ருனும் வேற்றுமை இல்லை என்று ஓர்க.
>
> (சிவஞானபோத ஆராய்ச்சி. பக். 204).

எனவரும் அவர் எழுத்துக்களால் அறியலாகும். இறைமை, ஈசுரம், தலைமை, உயர்வு என்பன ஒரு பொருட் சொற்கள். ஆகவே தலைவன் என்பதை, ஈசுரன் என்பதை, இறைவன் எனக் குறித்தலும் ஆம்.

# தனிம வரிசை

இல. க. இரத்தினவேல், அறி. மு.
பூதவியல் துறை, அறிஞர் அண்ணு அரசினர் கல்லூரி,
செய்யாறு-604407.

## 17-ஆம் நூற்ருண்டுக்கு முந்தைய தனிமங்கள்

செம்பு முதல் கரி ஈருன தொண்டு(9)த் தனிமங்களும் மிகப் பழைமையானவை. பெரும்பாலும் இயல்பாகவே தனிம நிலையில் கிடைத்தன. பதினைந்தாம் நூற்ருண்டில் தனிமப் படுத்தப்பட்டவை, நாகம் (Zinc), அன்றிமுனி (Antimony), வெய்யம் (Bismuth); இவை மூன்றும் மாழைகள் (metals). 17-ஆம் நூற்ருண்டில் தனிமப் படுத்தப்பட்ட அரசனி (Arsenic)யும் பொசுப்பொறை (phosphorous) யும் அன்மாழைகள் (non metals).

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

திருவள்ளுவரும் இங்ஙனமே குறிக்கின்ருர். இத்தகைய சொல்லே 5ஆம் குறளிலும் 10ஆம் குறளிலும் காணப்படும் 'இறைவன்' என்பது. 'இறைவன்' எனத் தமிழாகமங்களில்-தொல் வரவுகளில்—குறிக்கப்பட்டதையே சங்கிருத நூலார் 'ஈசுவரன்' 'மயேசன்' எனக் குறிததனர் எனக்கருதுவதும தவருகாது. இது எங்ஙனமாயினும், ஈசுரன் என்பதும் இறைவன் என்பதும் சிவதத்துவங்களுள் மயேச தத்துவக் கடவுளைக குறிக்கும் சொற்கள் என்பதில் ஐயமே இல்லை. ஏன்? 2ஆம் குறளில சுத்தவித்தை—வாலறிவன்—எனவரும் சிவ தத்துவத் தொடர்புடைய சொல்லோடு இறைவன் என்னும் இச்சொல்லும், இனமாகச் சேர்ந்து கடவுள் வாழ்த்து அதிகாரத்திலேயே காணப்படுகிறது. மற்றைய 3 தத்துவங்களும்—நாதவிந்து சதாசிவங்களும்—இவ்வதிகாரத்து மூதற் குறளில் குறிக்கப்படுகின்றன. இந்நிலையில் 'இறைவன்' என்னும் சொல்லும் அதிகாரத்திலேயே வள்ளுவரால் ஆளப்படுகிறது. ஆதலின் இனம்பற்றியும் பொருள் தொடர்பு பற்றியும் 'இறைவன்' என்பது, ஈசுரன் எனும் மயேச தத்துவத் தலைவனையே குறிக்கும் என்பது தெளிவு. இங்ஙனம் திருக்குறளில் 'கடவுள் வாழ்த்து' எனும் மூதல் அதிகாரத்திலேயே—பாயிரத்திலேயே—சிவ தத்துவங்கள் ஐந்தையும் பற்றிக் கூறியுள்ளனர் வள்ளுவர் என்பது பெறப்படும். படவே. இறைவன் என்னும் சொல் நாரண பகவனைக் குறிக்கும் வைதிகச் சொல்லன்று; மயேச பகவனைக் குறிக்கும் ஆகமச் சொல்; அவைதிக மரபு பற்றிய தமிழ்ச்சொல் எனத் தெளியலாம் எனவே 'இறைவன் பொருள் சேர் புகழ்' 'இறைவனடி' எனக் கடவுள் வாழ்த்தில் வருவன, வைதிக நாரணனைப் பற்றியவை ஆகா; ஆகமச் சிவத்தைப் பற்றியவையே யாம்.

(தொடரும்.)

# 10. நாகம் (ZINC) $Zn^{65}_{30}$

அல்லவை செய்யும் இரும்புக்கு விரைவில் அழியும் தன்மையை அளித்த ஆண்டவனை நோக்கி "மக்களுக்கு அளப்பரிய பயனை அளித்துவரும் என்னை அம்மக்கள் தவருகப் பயன்படுத்திய கரணியத்துக்காக அவர்களையல்லாமல் என்னைத் தண்டித்தல் முறையா? துரு ஏறி நான் அழிவது தகுமா? மிகப் பழங்காலந்தொட்டு மிகப்பெரும்பயன் நல்கிவரும் என் தொல் பழைமையைக்கூட எதிர்காலத்தினர் அறியக் கூடாதவாறு நான் ஒழிந்து விடுதல் நயன்மையா? என்னைக் காத்தருளல் உன் கடமையே!"—என இரும்பொன் இறைவனை இரந்து வேண்டினுன்.

அதனைச் செவிமடுத்த ஆண்டவன், "நல்லது! உன் சாவக் கேடு நீங்க ஒரு வரம் அருள்கிறேம். நாகன் என்ற உன் இனத்தான் ஒருவன் பிறருடன் கூடிக்கலந்து உருத்திரிந்து மண்ணுள் புதைந்துள்ளான். அவன் தன் தளைகளை அறுத்துத் தனியன் ஆனவுடன் உனக்குக் கவசமாய் அமைந்து உன்னை அழியாது பாதுகாப்பான். அதுவரை நீ அழிவுற்ருலும் கவலாது என்னை நோக்கித் தவங்கிடக்க!" என்று அருளினுர்.

"இந்தக்கொடுமை எதுவரை?" என்ருன் இரும்பொன்.

"கலி காலத்தில் தொழிற்புரட்சி என்ற ஒன்று வெண்ணிற மேன்மக்கள் நாட்டில் தொடங்கும் காலத்தில் அந்த வெண்ணிற நாகனுல் உன் சாவக்கேடு நீங்கத் தொடங்கும்" என்று அருளினுர், ஆண்டவன்.

—அக்காலத்தில் என்ருல் இந்நாட்டில் இப்படியொரு கதையைக் கட்டி, "நாக உலகத்தில் (நாகலோகம் = பாதாளலோகம்) இருந்து வந்த தெய்வம் நாகன்; அதனுல் நாகத்தை நாள்தோறும் வணங்கி அணிந்து வந்தால், நாகக் கவசமாய் அஃது அமைந்து, நம்மைப் பாதுகாத்து நற்பேற்றை அருளும் எனப்பல நெடுங்கரிசன்களை உருவாக்கியிருப்பர். 'இரும்புக்குக் கவசமாய் அமையும் மாழை நாகம்' என்ற கருத்துடன் இது நிற்க.

**பெயரீடு :** நாகம் என்ற சொல்லுக்கு எத்தனையோ பொருள்கள் (பிங்கலந்தை 3717) இருப்பினும் நமது நினைவுக்கு வருவது நல்ல பாம்பு என்ற நச்சரவம் தான். அதன் அளவுக்கு நஞ்சு இல்லா

விட்டாலும், ஓரளவு நஞ்சூட்டும் மாழையின் பெயரும் நாகம் என்றே அமைத்து விட்டது.

நாகம், காரீயம் என்றும்; துத்தநாகம் என்றும்; ஒரோவழி மதுகம் என்றும் வழங்கப்பட்டது. (மதுகம் = "நாகம்" பவானந்தம் (பிள்ளை) தற்காலத் தமிழகர முதலி, இலண்டன் மாக்மில்லன், 1952). இந்த மூன்று சொற்களில் காரீயம் என்ற சொல்லின் குறைபாடு ஏற்கனவே விளக்கப்பட்டது. (காண்க: வெளியம் தென்மொழி 14: 3. பக் 14). துத்தநாகம் என்பது இரு பெயர் அடைவுச் சொல், 'மதுகந்தராவாம்! (பிங்: 1239) என்பதன்படி மதுகம் காரீயத்தையும் சுட்டுகிறது, எனவே இந்த 30-ஆம் தனிமத்தைக் குறிக்க எளிய சொல்லான நாகம் விதந்து பரிந்துரைக்கப் படுகிறது.

**ஐரோப்பிய நாகம்:** பாராசெல்சசு (Paracelsus 1490—1541) என்பவர் நாகத்தை 'செம்பின் இழிபிறவி' என வண்ணித்தார். இவர்தான் 'சின்க்' (Zinc) என்ற சொல்லால் நாகத்தைக் குறித்தார். இதன் செர்மன் மூலச்சொல்லான 'சின்க்'(Zink)இன் வேர்ச்சொல் விளங்கவில்லை. சியார்சசு அஃறிகோலா (Georgius Agricola 1494—1555) சிலேசியா (Silesia) என்னும் இடத்தில் கண்ட தாதுவை 'சின்க்கம்' (Zincum) என்றும் அதன் மாழையை 'Contrefey' என்றும் குறிப்பிடுகிறார்.

தங்கம், வெள்ளி போல அல்லாமல் விலை மதிப்புக் குறைந்த மட்ட மாழை வகையுள் செம்பு, இரும்புடன் நாகமும் அடங்கும்.

**வரலாறு:** மாழை நாகம் (Metallic Zinc) இயற்கையில் தனிம நிலையில் எங்கும் கிடைப்பதில்லை; நாகத் தாதுக்கள் ஆகவே கிடைக்கிறது. சுரங்கம் அமைத்து நாகத்தாதுக்களைத் தோண்டி எடுக்கின்றனர். நில ஓட்டில் கிடைக்கும் மாழைகளின் செழிப்பில், நாகம் 24ஆவது இடத்தைப் பெறுகிறது: 'நாகசல்பைடு' (ZnS) முதலான நாகத்தாதுக்களில் 90% நாக மாழை உள்ளது. இத்தகைய கூடிகைகள் மாந்தனுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தன. இந்தக் கலப்பு நாகம் செம்புடன் சேரும்போது உருவான மாழைதான் 'பித்தளை' (Brass). மாழை நாகத்தின் பயனை அறிந்தபின் அதனைத் தனிமப்படுத்தும் ஆராய்ச்சி தொடர்ந்தது. 1450-க்கு முன்னர்தான் தனிம நாகம் பகுத்தறியப்பட்டது எனினும் தனிம நாகத்தை முதன் முதல் கண்டவர் எவர் எனத் தெரியவில்லை.

மாழை நாகத்தைப் பிரித்து எடுத்து வணிகப்படுத்தும் முதல் தொழிற்சாலையை இங்கிலாந்தில் பிரிசுடலுக்கு (Bristol) அருகில், வாம்லி (Warmle) என்ற இடத்தில் வில்லியம் சேம்ப்பியன் (William Champion) என்பவர் நிறுவினுர். இதற்கான 'வெளிக் குளிர்ப்பி பொருத்திய உலை' ஒன்றின் உரிமையை இவர் 1738இல் பதிவு செய்ததாகத் தெரியவருகிறது. எனினும் இதற்கு மிக முன்னரே சீனுவிலும் இந்தியாவிலும் இந்த 'வெளிக்குளிர்ப்பி' முறை வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. இந்த முறையை சேம்ப்பியன் எவரிடம் இருந்து அறிந்தார் என்பது புலப்படவில்லை

1597இல் இலிபாவியசு (Libavius) என்பார் 'மலபார் வெளியம்' (Malabar tin) எனக்குறிப்பிடுவது, நாகத்தைத்தான். ஐரோப்பியர் தமிழ்நாட்டை மலபார் என்றே குறித்து வந்ததை (காண்க. மயிலை சீனி வேங்கடசாமி 'கிறித்துவமும் தமிழும்') நோக்க, நாக உருவாக் கத்தில் தமிழ்நாட்டின் சிறப்பை உய்த்துணரலாம், எனினும் சேப்ப்பியன் கையாண்ட வெளிச்குளிர்ப்பான் முறை 'ஆங்கிலமுறை' என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

**நாகம் நிறைந்த நாடுகள் :** மாழை நாகம் மிகுதியாய்க் கிடைக்கும் நாடுகள் முறையே அமெரிக்க ஒன்றியம், சோவியத்து ஒன்றியம், ஆசுத்திரேலியா, பெரு, மெஃசிகோ, சப்பான் ஆவன. 20ஆம் நூற்றுண்டின் பிற்பாதியில் ஓர் ஆண்டில் சராசரியாகக் கிடைக்கும் நாக மாழை 3·8 'டெராகிராம்' (அஃதாவது $3.8 \times 10^9$ 'கிலோகிராம்' = 380 கோடி 'கிலோகிராம்').

**நாகத்தின் பயன் :** புதிதாக வார்த்த நாகம் பளபளக்கும் வெளிர்—நீலப் பரப்புடன் பிறங்கும். ஆனுல் காற்றுப் படப்பட நாளடைவில் இதன் புறப்பரப்பு காற்றில் உள்ள உயிரகை (Oxygen) யுடன் கூட, நாக உயிரகை (Zn O)ப் படலம் உருவாகிறது எனவே இப்பரப்பு நரைநிறம் ஆகச் சாம்புகிறது. புறப்பரப்பில் உருவான இப்படலம் கவசம் போல் அமைந்து, உள்ளுள்ள நாகம் மேலும் உயிரகைக்கப் படாதவாறு பாதுகாக்கிறது.

இதன் இந்தப் பண்புதான் இரும்பு, துரு ஏருமல் காக்கப் பயன் படுகிறது. நாகம் இரும்புடன் மிக எளிதாகக் கூடிக் கலக்கும். இரும்பு அல்லது எஃகுக்கு நாகப்பூச்சு அளித்தால், பூச்சின் புறத்தில் உள்ள நாகப்படலம் நாக உயிரகையாகி அதுவே அரிப்பைத் தடுக் கின்ற கவசம் ஆக அமைந்து இரும்பைப் பாதுகாக்கிறது. இந்த

இரும்புக் காப்புக் கவசப் பூச்சாகத்தான் உலகில் கிடைக்கும் நாகத்தின் பெரும்பகுதி பயன்படுத்தப்படுகிறது.

மிகத்தூய நாகத்தை மெல்லிய படலங்கள் ஆகவும், கம்பிகள் ஆகவும் எளிதில் இழுக்கலாம். நாகத்தகடு பசைமின் கலத்தில் புறச்சுவராகவும், எதிர்மின் வாய் ஆகவும் பயன்படுகிறது.

நாகப்படிகம் அறுகோண வடிவில் அமைகிறது.

நாகத்துக்கான பெர்சீலியசின் குறியீடு Zn ஆகும்.

நாகக்கூடிகைகள் (Zinc compounds)

*"ஓர்ஏழு செம்பில் ஒருமூன்று 'நாகம்'இடில்*
*பார்அறியப் பித்தளையாம் பார்"* (*கணக்கதிகாரம்-13*)

என்றவாறு 'பித்தளை' என்ற நாகக்கலப்பு மாழையைப் பழந்தமிழர் உருவாக்கியிருந்தனர். இன்றும் செம்பும் நாகமும் 70:30 எனக் கலந்து 'பித்தளை' உருவாக்கப்பட்டு வருகிறது. பித்தளை ஏனங்களும், கருவிகளும் இன்னும் கூட வழக்கத்தில் உள்ளன. இந்தப் பித்தளை எளிதாக வளையவும் கம்பியாக இழுக்கவும் ஏந்தாக அமைந்துள்ளது

நாகமும் சுற்பொறையும சேர்ந்து உருவான 'நாக சல்பைடு' (ZnS) ஒரு நிறமியாகும்.

மருத்துவத்தில் நாகக் கூடிகைகள்:

நாக உப்புகள் நுண்ணுயிர்க்கொல்லி, திசுச்சுருக்கி, நமைச்சல் ஊட்டி, வெப்பூட்டி மற்றும் நச்சுப் பொருள்களாக விளங்குகின்றன. எனவே எக்காரணியம் பற்றியும் மருத்துவக் கண்காணிப்பு இல்லாமல் நாக உப்புகளை உண்ணக்கூடாது, கண், காது, மற்றும் காயம், புண்களைக் கழுவ நாக உப்புக் கரைசல்கள் பயன்படும்.

(காலமைன் கரைசல் மற்றும் நெய், லாசர் பசை, உன்ஞு பசை, போன்றவற்றில்) தோல்மீதான பசைப் பூச்சாக நாக உயிரகை பயன்படுகிறது.

'நாக பெராக்சைடு' (Zinc Peroxide) நுண்ணுயிர்க் கொல்லியாக விளங்குகிறது. 'நாக இசுடீயெரேட்' (Zinc Stearate)-ஐப் படை (eczema)க்கு தடவலாம்.

'நாகசல்பேட்' கலந்த செந்நிறக் கரைசல் புண்களை ஆற்றப் பயன்படும்; வாந்தியை உண்டுபண்ணும்.

நாகம் வரையிலான பத்துத் தனிமங்களுக்கு மட்டும் அவற்றை முதன்முதலாகக் கண்டவர்களின் பெயர்களை அறியக்கூடவில்லை.

தொடர் 3

# பாவேந்தர் விழாப் பாட்டரங்கம்

—பெருஞ்சித்திரனர்

## 2. இனம்

இயற்கையினை ஒருவாறாய் ஈங்கெடுத்துச் சொன்னேன்!
இனம்பற்றிக் கூறுமவன் கருத்துநலன் கேட்பீர்!
செயற்கையிலாப் புலவனவன்! செந்தமிழ்த்தேன் ஊற்று!
செப்புகின்றான் கேளுங்கள்! எண்ணுங்கள் இதனை! 29-1, 2

*"தமிழர்நாம் என்றால் நம்பால்*
*தமிழ்உண்டா? ஒழுக்கம் உண்டா?*
*அமைவுறச் சிறிது முண்டா?*
*அன்றைய மறத்த னந்தான்*
*கமழ்ந்திடல் உண்டா? கல்வி*
*கலைநலம் உண்டா? நெல்லின்*
*உமிமுனை அளவி லேனும்*
*ஒற்றுமை உண்டா?"—என்ன?*

மயற்கையுள்ள தமிழினத்தின் முன்வந்து நின்று
மற்றொன்றைக் கேட்கின்றான்! சொல்லுங்கள் பார்ப்போம். 29-3

*"வெள்ளையன் ஆட்சி தொலைத்தோம்!—இனி*
*வேற்றுமை யுற்றுக் கிடந்தால்*
*எள்ளி நகைபுரி யாரோ?—நமை*
*இப்பெரு வையத்தில் உள்ளோர்?*
*கொள்கை திருத்திடு வீரே!"*

முயற்கையை யானைக்கை போல்மிகவே நீட்ட
முயல்கின்றோம் முயல்கின்றோம்! தோற்றுப்போகின்றோம்! 29-4

அதைக்கண்டு வருந்துகின்றான் பாவேந்தன் இங்கே!
அப்பாட்டில் அவன்ஏக்கம் கனவெல்லாம் தோன்றும்! 30-1

*"சரிநிகர் மக்கள் என்னும் அரியதோர்*
*அமைதிக் குரலினை ஆர்தல் எந்நாள்?*
*சமயம் சாதி தவிர்வ தெந்நாள்?"*

*"வெள்ளம்போல் தமிழர் கூட்டம்*
*வீரங்கொள் கூட்டம்; அன்னார்*
*உள்ளத்தால் ஒருவரே மற்*
*றுடலினால் பலராய்க் காண்பார்!*
*கள்ளத்தால் நெருங்கொ ணாதே'—*
*எனவையம் கலங்கக் கண்டு*
*துள்ளுநாள் எந்நாள்? உள்ளம்*
*சொக்கும்நாள் எந்த நாளோ"*

இதைக்கண்டு கொண்டோம் நாம்? என்செய்தோம்? இங்கே
ஏற்றத்தாழ் வொழிந்ததுவா? சாதிகள் மாய்ந் தனவா?
கதைக்கின்றோம் பாடுகின்றோம்! பாவேந்தன் சொன்ன
கருத்து க்கு மதிப்பில்லை! விழாவெடுப்போம்! அதனால்
புதைக்கின்றோம் அவன்பெருமை! புகழ்ச்சிவெறுஞ் சொல்லா?
புரட்சிசொன்னான்! மருட்சியுற்றோம்? இருட்காட்டில் வாழ்வோம்!
30—2,3,4

"இருட்டறையில் உள்ளதடா உலகமெலாம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றான்" என்றான்!
திருட்டுக்கூட் டம்தமிழர் கூட்டமென்று சொல்வேன்.
தில்லுமல்லுக் கூட்டந்தான்; இல்லையென்று சொன்னால்
குருட்டடியாய்ப் பாவேந்தன் பாட்டையெல்லாம் கூட்டங்
கூட்டந்தோ றும்சொல்லிப் பெரும்புலவர் போல
மருட்டுவமா மக்களைநாம்? சொன்னவற்றுள் ஒன்றை
மதிப்பிற்கே னும்செய்து பெருமைபெற் றோமா? 31

இனம்பாடி இனம்பாடி இனம்விழிக்கும் என்றே
எதிர்பார்த்தான் எதிர்பார்த்தான்! இனும்விடிய வில்லை!
மனம்போன படிவாழ்ந்து மாக்களினும் கேடாய்
மண்ணுலகில் தமிழினந்தான் பின்னடைந்த தென்று
பெனம்பெரிய பெருமையினை நாம்வாங்கிக் கொண்டோம்!
பேசுகின்றோம்! வீசுகின்றோம்! பெருத்தநடை போட்டோம்!
இனும்திருந்த வில்லையெனில் என்றுந்திருந் தோம்நாம்!
'இன்னலிலே துயில்கின்றோம்' பாவேந்தன் சொல்வான்! 32

***"இன்னலிலே தமிழ் நாட்டினிலே உள்ள***
***என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்!***
***அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கி,என்***
***ஆவியில் வந்து கலந்ததுவே!"***

இன்பத்தில் தூங்கிடலாம்! 'இன்னல்களுக் கிடையில்
என் தமிழ மக்கள் துயில் கின்றனரே' என்ருன்!
துன்பத்தில் தூங்குபவன் நோயாளி, பேதை!
'துயின்றிருந்தார் என் தமிழ மக்க'ளெனும் கூற்றில்
என்புதுமை காட்டுகின்ருன்? தெரிந்தீரா? மற்ற
இனமக்கள் எல்லாரும் விழித்திருக்கின் ருராம்!
'என்மக்கள் மட்டும்துயில் கின்ருர்'என் கின்ருன்!
இதனுலே கழிவிரக்கம் கொள்கின்ருன் நம்மேல்! 33

நம்மினத்தை அன்னவன்போல் விழிக்கவைக்கும் முயற்சி
நாளைவரை எப்புலவன் தமிழகத்தில் செய்தான்!
வெம்மனத்தைக் கொண்டுள்ளோம்! வீண்வாழ்க்கை வாழ்வோம்!
விடியாத மூஞ்சிகளாய்த் தூங்குகின்ரேும் இன்னும்!
அம்மணமாய் நம்முன்னர் அலைந்தவர்கள் எல்லாம்
அழகழகாய் உடையுடுத்தே உலகஉலாப் போந்தார்!
கும்மிருளில் குருட்டாட்டம் போடுகின்ரேும்! ஐயோ!
'கும்பிக்குச் சோறு'என்ருல் தாயினைவிற் கின்ரேும்! 34

## 3. சீர்திருத்தம்

அடுத்தபடி பாவேந்தன் சீர்திருத்தம் சொல்வான்!
அத்தனையும் நாம் கேட்டோம்; கேட்டுநடந் தோமா?
உடுத்தபடி உண்டபடி உறங்கியுறங் கியராய்
உயிர்த்துயிர்த்துச் சாகின்ரேும்! உருப்படியாய் வாழோம்!
மடுத்திடுவீர் பெண்கள் நலம் பேசுகின்ருன்; நாமும்
மாரடித்துப் படிக்கின்ரேும்; நொண்டி நொண்டி நடப்போம்!
கொடுத்தாலும் வாங்குகிலோம்; கொண்டாலும் காக்கோம்!
குலம்பிழைக்கப் பெண்களைநாம் வாழவைப்போம்; கேட்பீர்' 35

"இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்
இலேசுவழி ஒன்றுண்டு; பெண்களைஆ டவர்கள்
எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்!
தாய்மையினை இழித்துரைக்கும் நூலும்ஒரு நூலா?
செவ்வையுற மகளிர்க்குக் கல்விநலம் தேடல்
செயற்பால தாயினுமே முதன்மைஎனக் கொண்டே
அவ்வகையே செயல்வேண்டும்! அறிவுமனை யாளால்
அமைதியுல குண்டாகும்!"—பாவேந்தன் சொல்வான்!

''பெண்டாட்டி என்று பெயரடைந்த நாள்முதலே
ஒண்டொடிக்கும் சொத்தில் ஒருபாதி உண்டுரிமை!
தன்மனைவி செத்தால்தான் வேறுமணம் தான்செயலாம்!
இன்னல் மனைவிக் கிழைத்தால் கொலைக்குற்றம்"

"ஆணுயர் வென்பதும் பெண்ணுயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை"—

தீண்டாமை பற்றியெல்லாம் மிகத்தெளிவாய்ச் சொன்னான்!
திராவிடர்தம் இனத்தலைவர் நம்பெரியார் சொன்ன
வேண்டாமைப் பட்டியல்கள் அனைத்தையுமே பாட்டாய்
ஆரியர்கள் வெலவெலக்க ஆக்கியவன் தந்தான்!
''தீண்டாதார் எனுமவரும் பிறரும்ஓர் தாயின்
திருவயிற்றில் வந்தவரன் றோ?" என்றே கேட்டான்!
ஈண்டெல்லாம் பெருச்சாளி கோயில் நுழைகையிலே
இவர்க்குமட்டும் கோயில்விலக் கேனென்றார்ப் பரித்தான்! 36

"நித்தமும் சாக்கடை நீந்தும் பெருச்சாளி
நேரில்அக் கோயிலிலே—கண்டும்
ஒத்தபிறப்பின ரைமறுத் தீர்உங்கள்
கோயிலின் வாயிலிலே!''

''ஏகபரம் பொருள் என்பதை நோக்க
எல்லாரும் உடன் பிறப்பே!—ஒரு
பாகத்தார் தீண்டப் படாதவர் என்பதி
லே,உள்ள தோ சிறப்பே!''

"இந்த உலகில் எண்ணிலா மதங்கள்
கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்
சாதிக்குச் சாவுமணி அடிக்க''

சாதியொழிப்பதும் தமிழை வளர்ப்பதுமே நம்மோர்
செயவேண்டும் சீர்திருத்தம் எனத்தெளிவாய்ச் சொன்னான்.
37-1

''சாதி ஒழித்திடல் ஒன்று—நல்ல
தமிழ் வளர்த்தல்மற் றொன்று!
பாதியை நாடு மறந்தால்—மற்றப்
பாதி துலங்குவ தில்லை,''

சாதியொழி யாதஒரு மக்களினந் தன்னில்
சரிநிகர்த்த வாழ்வெங்ஙன் அமைந்துவிடும் என்றான். 37-2

"சரிநிகர் மக்கள் என்னும் அரியதோர்
அமைதிக் குரலினை ஆர்தல் எந்நாள்?
சமயம் சாதி தவிர்தல் எந்நாள்?"

"என்றுதான் சுகப்படுவதோ?—நம்மில்
யாவரும் சமானம் என்ற நன்னிலை யில்லை—அந்தோ
ஒன்றுதான் இம் மானிடச் சாதி—இதில்
உயர்பிறப் பிழிபிறப் பென்பதும் உண்டோ"

சாதியொழி யாநிலையில் குடியரசால் என்ன
சாய்த்துவிடப் போகின்றோம்? சட்டங்கள் வேண்டும்!
மீதிவகைத் திருத்தமெனப் பட்டியல்கள் சொல்வான்!
மேம்பட்ட புலவனவன் பாடுவது! கேட்பீர்! 37-3,4

"நாட்டினிலே குடியரசை நாட்டிவிட்டோம் இந்நாள்
நல்லபல சட்டங்கள் அமைத்திடுதல் வேண்டும்!
காட்டோமே சாதிமணம்! கலப்புமணம் ஒன்றே
நல்வழிக்குக் கைகாட்டி! கட்டாயக் கல்வி
ஊட்டிடுவோம் முதியோர்க்கும் மாணவர்க்கும் நன்றே!
உழையாளை நோயாளி ஊர்திருடி என்போம்!
கேட்டையினி விலைகொடுத்து வாங்கோமே; சாதி
கீழ்மேல்என் றுரைப்பவர்கள் வாழுவது சிறையே!"

"ஒருகடவுள் உண்டென்போம்; உருவணக்கம் ஒப்போம்;
உள்ளபல சண்டையெல்லாம் ஒழியும்மதம் ஒழிந்தால்;
திருக்கோயில் தொழிற்சாலை" என்றவனும் சொல்வான்!
தீமைதரும் தொல்லைகளை உடன்மாற்றக் கேட்டான்.
திருமணத்தும் சீர்திருத்தம் வேண்டுமென்று சொல்லித்
'திராவிடர்க்குப் புரட்சியான திட்ட'மொன்று தந்தான்
ஒருமணத்தை ஆதரித்தான்! மறுமணத்தை ஏற்றான்!
உயர்காதல் போற்றுதற்குக் கருத்தடையை ஏற்றான். 38

"காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்! இதிலென்ன குற்றம்?
சாதலுக்கோ பிள்ளை? அன்று தவிப்பதற்கோ" என்று
சாட்டையடி யாய்க்கேட்டான் பல்லாண்டு முன்பே!

தீதில்லாப் பொதுவுடைமை வேண்டுமெனச் சொல்லும்
தெள்ளுதமிழ்ப் பாடல்களை உலகறிய வேண்டும்! 39-1,2,3

"புதியதோர் உலகுசெய் வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்!"

"எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்!"

"எல்லார்க்கும் தேசம்! எல்லார்க்கும் உடைமையெலாம்!
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!"

கோதில்லா நெஞ்சத்தின் உயர்கருத்தாம்! இவற்றைக்
கோணல்உலகம்ஏற்று, நிலைநிமிரல் வேண்டும், 39-4

'கட்டாயக் கல்வியொடு பணிவேண்டும்' என்பான்!
'கல்விதராக் கசடர்க்குத் தூக்குமரம்' என்றான்!
திட்டமிட்டுத் தொழிலாளர் ஒன்றுபடல் வேண்டும்,
தீங்குவரும் இல்லையென்றால்" என்றறிக்கை செய்வான்! 40-1,2

"வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால்!
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் இன்றுவரை
மூடிய தொழிற்சாலை முக்கோடி"—என்பான்!

மட்டமெனத் தமிழ்மொழியை மதிக்கின்ற செயலை—
மடமையெனக் கடிந்தொதுக்கித் தமிழர்களைப் பார்த்துக்
திட்டமிட்ட படைவேண்டும் தமிழ்காக்க என்றான்!
தெருவிலுள்ள பலகைகளில் தமிழ்வேண்டும் என்றான்! 40-3,4

"வாணிகர்தம் முகவரியை வரைகின்ற பலகையில்ஆங்
கிலமா வேண்டும்?
மாணுயர்ந்த செந்தமிழால் வரைக என அன்னவர்க்குச்
சொல்லல் வேண்டும்!"

தனித்தமிழை வலியுறுத்தித் 'தமிழியக்கம்' செய்தான்!
தான்தொடக்கத் தெழுதிவிட்ட கலவைநடை போல
இனித்தாளில் எழுதிடுவ தில்லையெனச் சொன்னான்!
எம்மொழிக்கும் தமிழ்மொழியே தாய்மொழியென் றார்த்தான்!

தனித்தமிழை வற்புறுத்திப் பாவேந்தன் சொன்ன
தங்கவரிப் பாடல்களை நம்மிளைஞர் பாடி
பனித்தமிழை உலகமெலாம் பரப்பிடுதல் வேண்டும்!
பாவேந்தன் பாடுகின்றான் செவிமடுத்துக் கேட்பீர்! 41

"தொண்டர்படை ஒன்றமைத்துத் தமிழ்எதிர்ப்போர்
தொடர்ந்தெழுதும் ஏட்டையெல்லாம்
கண்டறிந்த படிஅவற்றை மக்களெல்லாம்
மறுக்கும்வண்ணம் கழற வேண்டும்!"

"ஆங்கிலத்தைக் கற்கையிலும் அயல்மொழியைக்
கற்கையிலும் எந்த நாளும்
தீங்கனியைச் செந்தமிழைத் தென்னாட்டின்
பொன்னேட்டை உயிராய்க் கொள்வீர்!"

"வடமொழியும் பிழைத்தமிழும் பெருகிவிட்டால்
வருநாளில் தமிழழியும் வடமொழி மேலோங்கும்"

"பிறமொழிக்குத் துணைநின்றும் தமிழ்மொழியின்
பீடழிக்கும் செயல் புரிந்தும்,
சிறுமையுறு வடமொழிக்குக்
கழகங்கள் இங்கமைத்தும் தீங்கு செய்வார்"

"நற்றமிழில், தமிழகத்தில் நல்லெண்ணம்
இல்லாத நரிக்கூட்டத்தைக்
கற்றுவைக்க அமைப்பதினும்
கடிநாயை அமைத்திடலாம்"

மொழிநிலையிற் பாவேந்தர் தமிழர்க்குச் சொன்ன
முழுக்கருத்தும் தமிழர்களின் உளத்திருத்தல் வேண்டும்!
அழிநிலையில் உள்ளதமிழ் அழிய அழியத்தான்
ஆன்றஇனம் அழிந்துவரும் உண்மையிது காண்பீர்!
விழிநிலையில் வைத்துதமிழ் காத்துவரல் ஒன்றே
வீழ்ந்தஇனம் மீண்டுமெழ வாய்ப்புநல்கும் என்பேன்!
பழிநிலைக்கே ஆளாக வேண்டாமே தமிழர்!
பாழ்விழுந்தால் தமிழினமே படிப்படியாய் மாளும்! (தொடரும்) 42


## ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

—என்பது பற்றி விரிவும் விளக்கமும் வாய்ந்த நெடிய மருத்துவ இயல் கட்டுரை, தென்மொழியில் விரைவில் தொடரவிருக்கின்றது.

**உடனே நீங்கள் உறுப்பினராகிக் கொள்ளுங்கள்.**

# செய்திகள்

**1. திருச்சி-குழந்தை-ஈகவரசன்-சூடாமணி திருமணம்:**

கடந்த, தி.பி 2008, மடங்கல் 26 (11—9—77) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில், திருச்சி, திருவெறும்பூர், சுபிலாயபுரம், திருமண மண்டபத்தில், நெடுநாளைய தென்மொழியன்பரும், ஆராத் தமிழ் இனப்பற்றுளருமாகிய செல்வன் குழந்தை—ஈகவரசன் (பாரத மிகுமின் தொழிலகம், திருச்சி–14) அவர்களுக்கும், செல்வி சூடாமணிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் தமிழ்த்திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி திருவாளர்கள் வை. தங்கராசு, ஆ. பாசுகரதாசன், புலவர். கதிர். தமிழ்வாணன், தென்மொழி-மறை. நித்தலின்பனார் எழிலரசன், இன்னும் அலுவலக அதிகாரிகள் ஆகியோர் உரை நிகழ்ததினர். இறுதியில் இன்சுவை விருந்துடன் திருமணம் சிறப்புற முடிவுற்றது.

**2. சென்னை—சித்தார்த்தன்—சாந்தா திருமணம்:**

சென்ற தி. பி. 2008, மடங்கல் 30 (15—9—77) வியாழக் கிழமை காலை 9-மணியளவில், சென்னை, ‘தமிழம்’ ஆசிரியர் திரு. செம்பியன் அவர்களின் இளவல், செல்வன் செ. சித்தார்த்தன் அறி. இ அவர்களுக்கும், செல்வி. க. சாந்தாவுக்கும், சென்னை, தேனும்பேட்டை, காமராசர் திடல் திருமண மண்டபத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் திருமணம் நடந்தேறியது. அக்கால், புலவர் இரா. மதிவாணன். க மு; புலவர் இறைகுருவனார், பிலோ இருதயநாத், புலவர். தி. நா. அறிவொளி. க.மு., புலவர். இல. மா. தமிழ்நாவன் முதலியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை செய்தனர். நிகழ்ச்சிக்குப் பின் நடந்த சிறப்பான விருந்துடன் திருமணம் இனிது நடந்தேறியது. மணமக்களின் சார்பாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா ஐம்பது அன்பளிப்பாகத் தரப்பெற்றது.

**3. புதுவை. தாகூர் கலைக்கல்லூரி மாணவர் பேரவைத் தொடக்கவிழா:**

கடந்த 19—10—77 அறிவன் மாலை 5-30 மணியளவில், புதுவை, தாகூர் கலைக்கல்லூரியின் மாணவர் பேரவைத் தொடக்க விழா, கல்லூரித் துணைத்தலைவர் திரு. க. நாராயணன். க.மு. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பாவலரேறு பெருஞ் சித்திரனார் அவர்கள் பேரவையைத் திறந்து வைத்துக் காதலும் கடமையும் என்னுந்தலைப்பில் அரியதொரு சொற்பொழிவாற்றினார். தொடக்கத்தில், மாணவர் தலைவர் அ. கலியபெருமாள் (க.இ)

சிறப்புச் சொற்பொழிவாளரை வரவேற்றுப் பேசினார். பேரவைச் செயலாளர் எசு. கிருட்டிணராசு (க.இ) அவர்கள் பாவலரேறு அவர்களைப் பாராட்டி கலைத்திறன் மலிந்த பொன்னிறப் பூவாராடை ஒன்று போர்த்தினார். மாணவர்கள் சார்பில் ஆசிரியரவர்களுக்கு வாழ்த்துப்பா ஒன்றும் படித்தளிக்கப் பெற்றது. விழா வரங்க வாயிலில் ஆசிரியரை வரவேற்று வாணவெடிகளும் முழங்கின. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் முன்னரே இருந்து வரும் பூசல் காரணியமாக மாணவருள் ஓரணியினர், விழா அமைவாக நடைபெற விடாமல் சிறுசிறு சலசலப்புக் காட்டினரேனும், ஆசிரியர் உரையாற்றத் தொடங்கியவுடன், பூசலும், புரைசலும் படிப்படியாக குறைந்து விழா அமைதியாக முடிந்தது குறிப்பிடத்தக்கது.

### 4. கோவை - தமிழின மறுமலர்ச்சிக் கருத்தரங்கம்:

கோவை மாவட்ட மாணவர் தி. மு. க. சார்பில், கோவை, இராமநாதபுரம் (மருதூர்) நகராட்சி திருமண மண்டபத்தில், கடந்த 20—10—77 வியாழன் மாலை 6-மணியளவில், தமிழின மறுமலர்ச்சிக் கருத்தரங்கம் ஒன்று மாணவர் திரு. டேவிட் செல்வகுமார் (அறி.இ) தலைமையில் நடைபெற்றது. திரு. சாமிநாதன் (மாவட்ட தி.மு.க. செயலர்) அவர்கள் தொடக்க உரைக்குப்பின், திரு. இறையன், திரு. கி வீரமணி (ஆசிரியர் 'விடுதலை') திரு. தண்டபாணி, தென்மொழி மறை. நித்தலின்பனார் முதலியோர் கருத்துரையாற்றினர். இறுதியில் பாவலரேறு. பெருஞ்சித்திரனார், தமிழர்கள் தங்கள் குல, மத, கட்சி வேறுபாடுகளை அடியோடு நீக்கி, அனைவரும் 'தமிழர்' என்ற ஒரே அணியில் நின்று, தங்கள் மொழி, இன, நாட்டு மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டாலொழிய, எத்தனைப் பெரியார்கள் வந்து எத்தனை நூற்றாண்டுகள் பாடுபட்டாலும், எந்தக் கட்சி அரசுக்கட்டில் ஏறி ஆட்சி செய்தாலும் இத்தமிழினம் எவ்வகை முன்னேற்றமும் காண முடியாதெனவும், பெரும்பாலும் தமிழ் இனம் முன்னேறாமைக்குத் தமிழ்நாட்டில் உள்ள கட்சிப் பூசல்களே காரணியம் என்றும் அழுத்தந் திருத்தமாக எடுத்துரைத்தார். இறுதியில் திரு. சிற்பியன் (ச.இ) நன்றியுரையுடன் கூட்டம் 10-மணியளவில் சிறப்புடன் முடிவுற்றது. கூட்டத்தொடக்கத்தில் கோவை தென்மொழி இயவம் சார்பில் ஆசிரியரிடம் மாலைக்குப் பகரமாக உரு ா. 5 அன்பளிப்பாகத் தரப்பெற்றது.

---

## உலகத் தமிழ்க்கழக நான்காவது மாநாடு.

தி.பி. 2008 நளி 25, 26 காரி, ஞாயிறு (1977 திசம்பர் 10,11) ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் அறிஞர்களும், அமைச்சர்களும் கலந்து சிறப்பிக்க இருக்கின்றனராதலால், அனைவரும் குடும்பத்துடன் வருகைதர அணியமாகும்படிக் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றார்கள்.

---

புதுவை, தாகூர் கலைக்கல்லூரியில் 19-10-77 அன்று நடந்த மாணவர் பேரவைத் தொடக்க விழாவின் பொழுது பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு அளித்த

# வரவேற்பிதழ்

பாப்புலத் தலைமை யேறே!
பழந்தமிழ் ஊற்றே! சாறே!
மிப்புகழ் தமிழக் கூட்டம்
மிடியுறத் துயின்று நொந்தும்
மாப்புரை வாழ்வில் நைந்தும்
மடிபடா துயர்ந்து வாழக்
காப்பாகத் தோன்றி யோயே!
களிதமிழ்த் தாயின் சேயே!

மொழியின நாட்டுக் கென்று
முனைந்தநன் முனைவர்க் கெல்லாம்
விழியராய் விளங்கித் தூய
வினைகளில் மூழ்கிக் கொண்டே
அழிபடும் தமிழர்க் காக
ஆர்த்திவண் பிளிறி அன்னார்
இழிவினைத் துடைக்க வென்றே
இயங்குமெங் களிறே! வீறே!

கொள்கையும் அறிவும் மற்றும்
கொடுமுடி மானம் யாவும்
நல்குமோர் காசுக் கென்று
நயந்திவண் இளித்துக் கூனி
எள்ளுற வாழ்வில் விற்கும்
எண்ணரும் தமிழப் புன்மைக்
கள்ளரின் நடுவே காசைக்
கால்தூசாய்க் கருதும் மேலோய்!

உலகுலாக் கொண்டு மாந்தர்
உவப்புற வளர்ந்து பல்கி
நிலவிடும் மொழிகட் கெல்லாம்
நிலைக்கரு தமிழ்தா னென்றே
அலகிலா வாய்வால கண்டிங்
கரும்பெரும் முடிபு நாட்டும்
வலவராம் பாவா ணர்தம்
வழிக்கமை ஒளிவி ளக்கே!

தென்மொழி தமிழ்ச்சிட் டென்னும்
தீந்தமிழ் இதழ்கள் தோற்றி,
இன்மொழி இதனை யின்றே
இன்மொழி யாக மாற்றூர்
முன்னியே தீய்க்கப் பார்ப்பார்
முயல்வெலாம் அடக்கி, நம்மோர்
நன்னிலைக் கென்றே என்றும்
நாடுநந் தமிழ நாட!

இருபதின் ஆண்டாய் நம்மின்
    இன்றமிழ் தனித்த தூய்மை
அருமையை எழுத்தால் பேச்சால்
    அடைவொடு விடாது தொண்டுப்
பருமையால் மொழியை நாட்டை
    படுகிடைத் தமிழர் தம்மை
விருப்பொடு தூக்கும் நல்லோய்!
    வினைமகா! அறிவ வல்லோய்!

ஒவ்வொரு நொடியும் நம்மோர்
    உயர்வுக்கென் றுயிர்க்கும் தூயா!
எவ்வொரு பழியும் நம்மோர்க்
    கினியண்டா வாறுய் ஏய்ந்த
செவ்வையார் கொள்கை யார்த்துச்
    செயலிடை வித்தி, ஊற்றம்
கவ்விடச் செய்து, காத்துக்
    கலங்கிலா துழைக்கும் மேலோய்!

மூலமெய் யறிவில் மூழ்கி
    முத்தெடுத் தளந்தே இந்தக்
கோலநற் றமிழ்நாட் டார்முன்
    கொள்கெனக் கொட்டும் வேந்தே!
வாலவிழ் அறிவால் எம்மோர்
    வகைபட உயர்ச்சி வானில்
மாலற, பறக்கக் கால்கோள்
    மகிழ்வொடு ஊன்றும் சித்தா!

உம்மையித் தாகூர் கல்விக்
    கல்லூரி உறுப்பாம் நாங்கள்
எம்மகங் குளிர, இன்ப
    ஏற்றத்துத் தமிழால், ஈண்டுச்
'செம்மையா வா!வா!' என்றே
    வரவேற்பு நிகழ்த்து கின்றோம்!
எம்மகம் உயர வாழ்த்தி
    ஏற்றென வருக! ஐயா!

வருகவே! தமிழின் வேந்தே!
    வந்திவண் தமிழப் பேச்சால்
தருகவே இன்பத் தேக்கம்!
    தாகூர்கல் லூரி ஏற்றம்
பெருகவே இசைந்து வந்த
    பெருமைய! வணங்கி நின்றோம்!
வருகவே! வருக! தூய
    வான்தமிழ்ப் புலவ ரேறே!

19—10—77
புதுச்சேரி-1.

மாணவர்கள்,
மாணவர் பேரவை,
தாகூர் கலைக்கல்லூரி, புதுச்சேரி-1.

இலங்கைத் தமிழர் பக்கம் :

# இலங்கை அரசின் மும்மொழித் திட்டத்தால் தமிழர்க்கு எள்ளளவும் பயனில்லை!

அண்மையில் இலங்கையில் நடந்த சிங்களவரின் தமிழின அழிப்பு முயற்சிகளுக்குப்பின், அந்நாட்டின் தலைமையமைச்சர் திரு. செயவர்த்தனு உலகத்தினரின் கண்களுக்குத் தாம் நல்ல பிள்ளை என்று காட்டிக் கொள்வதற்காகப் பலவாறுன பசப்பு மொழிகளைப் பேசி வருவதுடன், சில புதிய திட்டங்களையும் தெரிவித்துள்ளார். அவற்றுள் ஒன்று தேசிய ஒற்றுமை என்னும் பெயரால் அறிவிக்கப் பெற்றுள்ள மும்மொழித் திட்டமாகும். அதன்படி தமிழர் சிங்களத்தையும் சிங்களவர் தமிழையும், இரண்டு இனங்களும் ஆங்கிலத்தையும படிக்க வேண்டும்.

முதலில், அங்கு நடந்து கொண்டிருப்பது சிங்களர்-தமிழர் இனப் போராட்டமோ, சிங்களம்-தமிழ் மொழிப் போராட்டமோ அன்று. ஏனெனில் அத்தகைய போராட்டம் என்பது இரு தரப்பினரின் ஒருங்கிணைந்த எழுச்சியைக் குறிப்பதாகும். ஆனல் அங்கு நடப்பது முழுவதும் சிங்கள வெறியர் அங்குள்ள சிறுபான்மைத் தமிழினத்தை அழிப்பதற்கென்றே எடுத்துக் கொண்ட பெரு முயற்சியாகும். வெளி உலகத்தில் உள்ள பெரும்பாலான மக்களுக்கு இவ்வுண்மை இன்னுந்தெரியாது. எனவே, திரு. செயவர்த்தனு அவர்கள், தமிழர்க்கு ஏதோ தங்கள் மொழிக்கு நேர்ந்த தாழ்ச்சிக்கு விடிவு கேட்பது போலவும், இவர் அதற்குத் தீர்வு சொல்வது போலவும் கூறி, வெளி உலக மக்களைத் திசை திருப்பும் வகையிலும், பெரியதோர் இன அழிப்பு முயற்சியை மூடி மறைக்கும் நோக்கத்துடனும், இம் மும்மொழித் திட்டத்தை அறிவித்துள்ளது பெரியதோர் அரசியல் ஏமாற்றுகும்.

இன்றுள்ள அரசியல் நிலைகளைப் பொறுத்த அளவில் இலங்கையின் ஆட்சி அதிகாரம் முழுவதும் சிங்களவர்களின் கையில் உள்ளது. சட்டப்படி அவர்கள் ஆளும இனத்தவர்கள்; தமிழர்களோ ஆளப்படும் இனத்தவர்கள். அதுமட்டுமன்று; சிங்களவர்களின் கருத்துப்படி அடிமையினத்தவர். எனவே அரசியல் சட்ட அடிப்படையில் தமிழர்களுக்கோ அவர்களின் மொழியாகிய தமிழுக்கோ எவ்வகையான உரிமையோ, பாதுகாப்போ இல்லை. தமிழுக்குச் சிங்களத்துடனிருந்த சம உரிமைகள் பறிக்கப்பட்டு 21 ஆண்டுகள் ஆகின்றன. திரு. பண்டார நாயகா 1956-இல் இலங்கைத் தலைமையமைச்சரானதும் முதல்வேலையாக 'இனிச் சிங்களம் மட்டுமே இலங்கையின் ஒரே ஆட்சி மொழியாக இருக்கும்' என்று சட்டம் கொண்டு வந்ததிலிருந்து, சிங்களந்தான் அந்நாட்டின் ஆட்சி மொழி, தேசிய மொழி, அரசு அலுவல் மொழி! (மத உரிமை கூட தமிழர்களுக்கு இல்லை. அங்குள்ள தேசிய மதமும் புத்த மதம் ஒன்று மட்டுமே!)

இன்று தமிழ்மொழி தாழ்த்தப்பட்ட இரண்டாந்தர மொழி; ஒதுக்கப் பட்ட மொழி; புறக்கணிக்கப்பட்ட மொழி! தமிழ்மொழிக்கு ஏற்பட்ட தாழ்ச்சி போலவே, நாட்டு ஆளுமை அதிகாரத்தில், கல்வியில் பொருளியலில், தொழில் நிலைகளில் தமிழினமும், ஒதுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் கிடக்கிறது. இக்காலோ, அரசு அலுவலகங்களிலும், கூட்டு நிறுவனங்களிலும் தப்பித்தவறிப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்று எஞ்சியிருந்த மிகச்சிறுபான்மைத் தமிழரும், அங்குள்ள சிங்களவர்களால் அடித்து விரட்டப்பட்டும் படுகொலை செய்யப்பட்டும் வருகிறார்கள்.

தமிழ் பேசும் மக்களின் பரம்பரை நிலப்பகுதிகள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினாலும், பிற வகைகளாலும், சிங்கள வெறியர் களால் கைப்பற்றப்பட்டு, அவர்களின் குடியேற்றப் பகுதிகளாகவும், ஆளுமையுரிமைக்குரிய நிலங்களாகவும் மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வகையில் தமிழின மக்கள் வாயிழந்த பூச்சிகளாக, புன்மைத் தேரைகளாக நலிக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வருகின்றனர். இந்நாளில் தமிழரின் உரிமைக்கும் உடைமைக்கும் உயிர்க்கும் இரக்கமோ, ஈவோ அந்நாட்டில் இம்மியும் இல்லை.

இத்தகைய கொடுமை நிலைகளுக்கெல்லாம் தமிழர்கள் சிங்களம் படிப்பதால் தீர்வு ஏற்பட்டு விடும் என்பது, பசி பட்டினியால் சுருண்டு விழுந்து மயங்கிக் கிடக்கும் ஒருவனிடம், அந்த நாட்டு மொழி படித்துக் கொண்டால் சோறு கிடைக்கும் என்று சொல்வதைப் போன்ற அடாத செயலாகும்! தமிழர்களுக்கு இன்று வேண்டுவது மொழி யுரிமையோ, இன உரிமையோ அன்று; நாட்டு விடுதலையே! தனிநாடு கிடைத்த பின் இன நிலையிலும் மொழி நிலையிலும் மற்றுப் பண்பாட்டு நிலையிலும் அவர்கள் இழந்து போன உரிமைகள் தாமே வந்து சேர்ந்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

1956-க்கு முன் தமிழர்கள் இயல்பாகவே சிங்களம் படித்துத்தான் வந்தார்கள். ஆனால் "சிங்களம் மட்டும்" என்னும் அளவில், என்று சட்டப்படி அம்மொழி மட்டும் முழுத்தனி ஆளுமை உரிமை பெற்றதோ, என்று தமிழ் இரண்டாந்தர, மூன்றாந்தர மொழியாக்கப்பட்டு— சட்டத்தின்முன் தன் முழு உரிமையையும் இழந்ததோ—அன்றிலிருந்து தமிழர்கள் சிங்களம் படிப்பதைத் தவிர்த்துத் தங்கள் தாய்மொழி யையும் கலை பண்பாடுகளையும் காக்கத் தொடங்கி விட்டனர். இப் பொழுதோ நிலைகள் இன்னும் தலை கீழாக மாற்றப்பட்டு, தமிழர்களின் உரிமைக் கப்பல் விடுதலை நிலத்தை நோக்கி வெகு தொலைவுக்குச் சென்று விட்டது. இந்நிலையில், பழைய கதையை நினைத்துப் பார்த்துச் 'சிங்களம் மட்டும்' என்னும் 1956-ஆம் ஆண்டின் ஒருசார்பு ஆளுமைச் சட்டம் இம்மியும் தளர்த்தப்படாத நிலையிலும்—தமிழ்மொழி வழி அரசுப் பணியில் தப்பித்தவறிச் சேர்த்துக் கொள்ளப் பெற்றோரும், மூன்று ஆண்டுகளுக்குள் சிங்களம் படித்துத் தேர்வில் தேற வேண்டும் என்றும், இன்றேல் அவர்களுக்குப் பதவி உயர்வு, வேலை நிலைப்பு, ஓய்வு ஊதிய வாய்ப்பு, ஒன்றுமே கிடையாது என்றும், (இவ்விந்திய நாட்டில் உள்ள இந்தி வெறியரின் கோட்பாடு போல்) உள்ள ஓர்

# "ஈழநிலை கேட்டவுடன்......!"

—இரணியன்.

[பழனி வட்டம், அமரப்பூண்டியிலிருந்து வெளிவரும் "தமிழ்ச்சுடர்" என்னும் கையேட்டில் வெளிவந்தது]

(உரைப்பா)

தென்னிலங்கை மண்ணில் செந்தமிழ மாமாந்தர்
செங்குருதி ஓடியவோர் செய்திதனைக் கேட்டிருந்தேன்!
உள்ளம் அதிர்ந்தது!
உடலோடும் செந்நீரும் உறைந்து கனத்தது!

"நாடொன்று காணு நடைப்பிணங்கள்
ஓடித் திரிந்தும் உலகமெலாம் போயுழைத்தும்
வாடிக் கலங்கும் வாழ்க்கைத் தனிமரங்கள்!
ஏவுவார் வாழும் இடமெல்லாம் போய், வாழ்வைக்
காவுதந்து, கண்ணீர்க் கடல்மிதக்கும் மெய்ப்பிணங்கள்!
உரிமை அலைமுழக்கை உணராக் கடலடிகள்!
ஒருலகப் பேச்சால் உரிமைதனை ஈடுவைத்துச்
சீரிழந்து நாளும் சிதைந்தழியும் ஏதிலிகள்!"
ஏதிலிகள் பட்ட இடரனைத்தும் கேட்கையிலே..........

ஓ!......  ............
நாவறண்டது! நடைமடிந்தது!
ஞாலவாழ்க்கையின் வேரறுந்தது!
வானிருண்டது! வாழ்விருண்டது!
வழிகள்முள்நிறைப் புதரடர்ந்தது!

அறமும்நேர்மையும் பிணங்களாயின!
ஆயிரம்நரிகளும் கழுகுந்தின்றன!

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் சட்ட நடைமுறைகளைச் சிறிதும் தளர்த்தாத நிலையிலும்—வெறும் ஒப்புக்கும், மெப்புக்கும் திரு. செயவர்த்தனு அவர்கள் மும்மொழித் திட்டத்தை அறிவித்துள்ள ஒரு நிலை, ஒன்று அவரின் கரவான உள்ளத்தைக் காட்டுவதாகும்; அல்லது தமிழர்களை அவர் இறுதிவரை ஏமாற்றிக்கொண்டே இருந்து விடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டதாகும்.

பெரிதும் சிறிதுமான இரண்டு இனங்கள், ஏதோ ஒரு கால நிலையால், இணங்கியும் நெருங்கியும் வாழவேண்டும் என்னும் கட்டாயத்துக்குட்படுத்தப் பெற்றுல், பெரிய இனத்தால் சிறிய இனம் அழிந்துபட்டு விடாமல்—அதன் தனித்தன்மைக்கு ஊறு நேர்ந்து விடாமல்—கட்டிக் காத்துக் கொள்ளும் திட்டத்தைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமேயல்லாமல், பெரியதில் சிறியது கரைந்து போகும் படியான திட்டத்தை நாம் மேற்கொள்ள வேண்டுமென்பது, எவ்வகையாலும் உயிரின வாழ்வியற் கூறுபாடுகளுக்கு ஒத்ததாகாது என்பது மட்டுமன்று; மாருகத் தீங்கு விளைப்பதும் ஆகும் என்பதைத் தொடர்புடைய அனைவர்க்கும் எச்சரித்துக் கூறுகிறேம்.

அறிவனும்பெரி யோனின்சொல்லெலாம்
அனலிடைக்கொழுந் தோடெரிந்தன!

உரிமைநீர்க்கடல் தீயெழுந்தது!
உலகுடைந்துவா னிற்பொடிந்தது!
வெறுமைஎன்னுமோர் பேயெழுந்தது!
விஞ்சுபேய்முழக் கேமிகுந்தது!

உளம் மருண்டது!
உயிர் வறண்டது!
உணர் விருண்டது!
உடல் அரன்றது!

அம்மோ..................!
ஏழைத் தமிழர் எந்திரமாய் வாழ்ந்துழல்வார்.
பட்ட கொடுமை பகரவொரு சொல்லறியேன்!
வெட்டுண்டு மாண்டோர், வெந்தீயில் நீறுனோர்,
கட்டுண்டு கற்பழிக்கப் பட்டதமி ழச்சியர்கள்,
பேய்த்தாக்கற் காளான பேதைத் தமிழ்மாந்தர்!
ஆயிரவர் ஆயிரவர் ஆயிரவ ரென்றறிந்தால்
மாந்த உரிமை மணல்மேடும் தீக்கொளுவும்!
வானதிரப் பேசும் வல்லாளர் நாவழுகும்!
'சிங்களவர் ஈழச் செந்தமிழர் தம்தமையர்'
என்ற வுரைகளெலாம் ஏமாற்றென் றெண்ணவரும்!

சீ!............
என்ன இழிவாழ்க்கை!
மன்னும் உலகமெலாம் மாடாய் உழைத்தலையும்
பென்னம் பெரியவொரு பேரினந்தான், தான்நிலவச்
சின்னஞ் சிறிய சிறுதீவும் தன்னதென —
சுற்றிச் சுழலும் தொல்லுலகில் எவ்விடத்தும்
பெற்றிலதென் கின்ற பிணவாழ்க்கை!

அண்டிப் பிழைக்கும் அடிநாயும் எற்றறியா
மொண்டிப் பிழைப்பு முடவாழ்க்கை!

இந்நிலையில் —
மண்புழுவும் பாம்பாய் மரமேறி நஞ்சுமிழும்!
சாணிச சிறுவண்டும் சண்டையிடப் பாய்ந்துவரும்!
யாரென்ன செய்வது!
ஒன்றுபடா இனமொன் றுருப்பெற்ற தெந்நாளில்?!

## மாநிலத் தாய்மொழிகள் புறக்கணிக்கப் படுகின்றன

"மாநிலத் தாய்மொழிகளின் வளர்ச்சி பேணப்படவில்லை. முந்தைய ஆட்சியினர் இதில் போதிய கருத்துச் செலுத்தவில்லை. மாநிலத் தாய்மொழிகளின் தளர்ச்சி இனியும் புறக்கணிக்கப்படலாகாது" என்று நடுவணரசு கல்வி மற்றும் மாநிலத்துறை அமைச்சர் திரு. பதகி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இச்செய்தி 25—10—77 மெயில் ஆங்கில நாளேட்டில் உள்ளது.

(அட்டை 4–ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதுவைக் குயிலோசை உன் செவியேறி உன்றனுக்குணர்வூட்ட வில்லையா? "செங்குத்து மலையினில் சிக்கித் தவித்தாலும் தங்கத் தமிழ்நாடு தாழப் பொறுக்காது" எனவுரைத்தவுரை வீணுரையா? வெற்றுரையா? "எங்குள்ள தமிழனும் இந்நாட்டுப் பங்காளி! பொங்கினால் ஒருள்ளம் பொங்கும் தமிழ் வெள்ளம்" எனும் உரை உன் நெஞ்சம் உணர்கிலையா? விடிழந்து, பொருளிழந்து, உடைமைப் பொருளெலாம் இழந்த நிலையில் நடுத்தெருவில் நிற்கின்றான் ஈழத் தமிழன், ஏதிலியாய்! ஏனென்று கேட்டு அவன்குறை தவிர்ப்பதற்கு ஆளில்லாக் காரணியத்தால் வெறியர்கள் தாக்குகின்றார்கள்; இத் தாக்குதல் ஆண்டுக்கு ஆண்டு, நாளுக்கு நாள் தமிழினத்தின் மேல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்நிலை மேன்மேலும் தொடர்ந்து நீடிக்குமேயானால் நாவலந்தீவுத்தமிழன் நிலைபொறுக்க மாட்டான் என்பதை இம்மடல்வழி சிங்கள வெறியர்களும் நடு வணரசும் உணர்ந்து கொள்ளட்டும்.

—சு. நற்குமரன். வழுவூர், மயிலாடுதுறை.

0·555: விஞ்சுதமிழ் உயர்வுக்கே நித்தமுழைக்கும் கொஞ்சு தமிழ்ப் பாவலர்க்கென் நெஞ்சுகந்த வணக்கம். 'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு'—என்று வீர முழக்கம் செய்த புரட்சிப் பாவலர் இன்று நம்மிடத்தில் இல்லை என்றாலும், "ஒற்றைத் தமிழன் உள்ளவரை உள்ளத்தே அன்றைத் தமிழ்த்தாய் ஆட்சி புரியும் வரை, மற்றை இனத்தார்க்கே மண்டி யிடான்" என உரிமைக்குரல் எழுப்பும் உங்கள் நறுந்தொண்டால் நம் தமிழினம் உயிர்பெற்றெழுவதை யாரும் மறுக்க முடியாது.

வேங்கடம் முதல் குமரிவரை அற்றைத் தமிழகத்தின் எல்லை பரந்து கிடந்ததை வரலாற்று வல்லுநர் உணர்வர். இன்றைய கன்னியாகுமரியும் தமிழகத்தோடு இணைந்து இருபது ஆண்டுகட்கு மேல் ஆகிறது. கேரள சட்ட மன்றத்தில் என்றைக்கும் இல்லாத திருநாளாக கன்னியாகுமரியைக் கேரளத்துடன் இணைத்திட வேண்டு மெனக் கூப்பாடு போட்டுள்ளனர். அரசியல் பின்னணியில் கூப் பாட்டிற்கு காரணியம் என்ன என்பதை எண்ணிப்பார்க்கும் போது, தமிழகத்தின் 'ஆட்சி மாற்றம்' ஒரு காரணியமாகப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் கம்பம், தேனீப் பகுதிகளிலும் சின்னாட்களுக்கு முன்னால் தமிழர்தம் உடைமைகள் சூறையாடப்பட்டதும், துன்புறுத்தப்பட்டதும் ஆகிய நிகழ்ச்சிகளும் மலையாளி –தமிழர் சிக்கலைத் தட்டியெழுப்புவதா யுள்ளது. ஆட்சியாளரும் இந்நிகழ்ச்சியினைத் தொடர விடாமல் அக்கறை காட்டி அமைதிப்படுத்துவதோடு, தமிழர் இயக்கங்களும் இதனை வன்மையாகக் கண்டித்துக் குரல் எழுப்பிடல் வேண்டும். தென்மொழியின் பணி தொய்வின்றித் தொடரட்டும். தொடரும் பணியில் எம்போலும் தமிழ்த் தொண்டர்கள் தோளொடு தோள் நிற்போம் எனச் சூளுரைக்கின்றோம், தமிழ் வாழ மட்டும் தமிழ்ப்பணி தொடரட்டும். —செ. அருள்இறைவோன். முகவை.

0:556; பெரும்மதிப்பிற்குரிய "தென்மொழி" ஆசிரியர் அவர் களுக்கு அன்பு வணக்கம் பல. ஐயா, நாம் இப்பொழுதுள்ளபடி சூடு சுரணையில்லாத துணிவில்லாத காட்டிக் கொடுக்கும் கயவர்களா

யிருக்கும் தமிழர்களாக இருக்கும்வரை "தனித்தமிழ்நாடு" அடைவது மிகக்கடினம். அதனுல் நாம் பெரும் வலுவுடன் "தனித்தமிழ்நாடு" பெறுவதற்கு ஒவ்வோர் ஊர் தோறும் மன்றங்கள் தொடங்கி அம் மன்றத்தின்மூலம் தமிழ்மொழியைப் பற்றியும், தமிழர்களுடைய வரலாறுகளைப் பற்றியும், நம் முதாதையர்களான தமிழர்கள் நம் தமிழ்நாட்டை எப்படி ஆண்டு வந்தார்கள், எந்த எல்லை வரை ஆண்டு வந்தார்கள், இப்பொழுது நாம் யாருக்கு அடிமைகளாய் வாழ் கின்ருேம், என்பதைப்பற்றியும் "நான் தமிழன் தான்" என்ற உணர்வு பெறத்தக்க அளவில் அன்ருட வகுப்புகள் அல்லது கிழமை வகுப்புகள் நடத்தவேண்டும். ஊர் தோறும் பொதுக் கூட்டங்கள் நடத்த வேண்டும். அப்படியில்லாமல் தமிழர்கள் எப்பொழுதாவது விழித் தெழுவார்கள் என்று நாம் எதிர்பார்த்திருந்தால் நம்முடைய உழைப்புகள் அத்தனையும் பாழாவதுடன் காலமும் கடந்து செல்லுவ தன்றித் "தனித்தமிழ்நாடு" அடைவதும் மிகக்கடினம். "தனிநாடு கோரிக்கை அனைத்துலகச் சட்டப்படி குற்றமன்று" என்ற கட்டுரைப் படி இப்பொழுதே நாம் போராட வேண்டியது தானே? ஏன் காலம் கடத்துவானேன். அதனுல் எனக்குத் தாங்கள் போராட்டத்திற்கு எப்பொழுது அழைப்பு அனுப்புவீர்கள் என்பதையும் தாங்கள் 'போர்க் குரல்' எழுப்புவீர்கள் எனவும் மிகவும் ஆவலுடன் எதிர்ப்பார்க் கின்றேன். —இரா. மதுரைமுத்து. சென்னை-8.

0:557: ஐயா அவர்கட்கு வணக்கம். இம்மாதத தென்மொழியின் ஆசிரியவுரை மிகவும் சிறப்பு வாய்ந்ததாய் இருக்கக் கண்டோம். அதனை மட்டும் கட்டமைப்புச் செய்து தனி நூலாய் விற்பனைக் கனுப்பியது மிகவும் வரவேற்கத் தக்க ஒரு நடவடிக்கையாகும். தன் மானமுள்ள தமிழர் அனைவரும் இக்கட்டுரையைப் படிக்கவேண்டும். 'தமிழர்களுக்கென்று ஒரு தனிநாடு' அமையவேண்டுவதன் தேவையை அக்கட்டுரை சுட்டிக் காட்டுவதைத் தன்மானமுள்ள தமிழர் ஒவ்வொரு வரும் உணர வியலும். "தனிநாடு—கோரிக்கை அனைத்துலகச் சட்டப்படி குற்றமன்று" என்னும் கட்டுரை நாட்டு விடுதலையில் வேட்கை கொண்ட அனைவருக்கும் சிறு கை விளக்காய்ப் பயன்தரவல்லது. தோழர்களாகிலும் இககட்டுரையைத் துண்டறிக்கையாய் அச்சிட்டு மக்கள் மன்றத்தில் பரப்ப வேண்டுவது முகாமைத் தேவைகளில் ஒன்றெனக் கருதுகிருேம். —இரணியன் —தேவத்தூர். பழனி வட்டம்.

0:558: ஐயா, வணக்கம்.

இற்றைத் திங்கள் தென்மொழி கண்டேன்
உலகியல் வெண்பா உயர்நயம் என்றன்
உணர்வைத் தொட்டே உயர்பா எழுதத்
தூண்டிய தையா! அகவல் வழியே
தகவல் தந்தேன். பெருமைச் சித்திரர்

மொழிநல முதுமையும் உயிர்ஒளி நுண்மையும்
உடலியற் றிறனும் உணர்வின் வகையும்
நிலையா மையின் நிலையெடுத் தியம்பலும்
இரண்டாம் நூற்ருண் டின்கண் வாழ்ந்த
புலனை வென்ற புலவனை யொப்ப
எடுத்துக் கிளக்கும் எண்ணம் என்றன்

உயிர்நெறி உணர்வைத் தோழமை கொள்ளச்
செய்தது! இதுபோல் செய்யுக நீடே!
வடமொழி யுணர்வுக் கடிமையே கொண்ட
மடிமிடித் தமிழர் ஓம்பும் மறையெலாம்
மறையவும் தென்மொழி உலகியற் பாக்கள்
நிறையவும் யாமும் வாழ்த்துதும் நன்றே!

நற்றிறஞ் செறிந்த சொற்றிறம், நாத்திறம்
உலையா ஊக்கம், உயர்வுளல் எண்ணம்,
மலையா நோக்கு, மாண்புயர் போக்கு,
நீடிய உயிர்நலம் நெறிசால் பயிற்சி
அனைத்தும் பெற்று, அயரா துயர
வாழ்த்துதும் யாமும் வளர்பெருஞ் சித்திர
ஒளிமிகு தமிழோய்! உமையினி வெல்வார்
யாரும் உளரோ? இலரே என்பேன்!

நின்றன் தமிழெண்ணம் நீடு நடைபெற
என்றன் கழகமும் என்றும் துணைசெயும்!
பெருஞ்சித் திரரே! பெறுகநல் இசையே!

—இரா. சித்தார்த்தன். பாளையம்பட்டு, முகவை.


## தென்மொழி அன்பர்களுக்கு ஒரு நல்வாய்ப்பு!

சலுகை விற்பனை!

**வழக்கறிஞர் கே. எசு. ஆனந்தம் வணி. இ; சட்ட. இ.**

அவர்கள் எழுதிய ஒப்பற்றதோர் ஆய்வு நூல்!

**1200** பக்கங்கள் கொண்ட மாநிலத் தன்னாட்சியின் கலைக்களஞ்சியம்!

# மலர்க மாநில சுயாட்சி!

அரசியல், வரலாறு, அரசமைப்பு, அயல்நாடுகளோடு ஒப்புமை, பொருள், சட்டம், குமுகாய வளர்ச்சி, இன்றைய அரசியல் சூழல் மாற்றுக் கருத்துகள் போன்ற ஒன்பது கோணங்களில் நின்று மாநிலத் தன்னாட்சி பற்றித் திறனாய்வு செய்யப்பெற்ற அரிய நூல்.

விலை 45 உருபா.

தென்மொழி அன்பர்களுக்கு மட்டும் 25 உருபா விலையில் விற்கப் பெறுகிறது! அஞ்சற் கட்டணச் செலவு 5 உருபாவும் சேர்த்து 30 உருபா பணவிடை செய்வோர்க்கு நேரிடையாக அனுப்பப் பெறுகிறது.

பணவிடை விடுத்து நூல் பெறவேண்டிய முகவரி.

வழக்கறிஞர் கே. எசு. ஆனந்தம்
கோபி செட்டி பாளையம். கோவை மாவட்டம்

# கைவிடப்பட்ட மனைவிகளும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளும் !

இரா. மதிவாணன், க.மு.

தமிழிலக்கியப் பரப்பில் எங்கும் மனைவியை வேண்டுமென்றே கைவிட்டு மீண்டும் ஏற்றுக்கொள்ள மறுக்கும் கணவன்மார்களையும் பெற்ற குழந்தைகளைக்கண்ட விடங்களில் போட்டுவிட்டுப்போய்விடும் பெற்றோரையும் காணவியலாது. வடமொழி இலக்கியங்களில் இவை இயல்பாகவுள்ளன. அவர்கள் மகளிரை நுகர்ச்சிப் பொருளாக மட்டும் கருதும் நோக்கினர் என்பது விசுவாமித்திரன், மேனகை தன் கைக்குழந்தையோடு வந்து கெஞ்சியபோதும் ஏற்கமறுத்துவிட்டதி லிருந்து தெரிகிறது.

துசியந்தன் சகுந்தலையைக் கைவிட்டதேயன்றி மறந்தும் விடுகிறான். அவள் நேரில் வந்து கேட்டும் அடையாளம் தெரியாதது போல் நடிக்கிறான். கணையாழியைக்கண்ட பின்பு உண்மை புலப் படுகிறதாம்! கைப்பிடித்த மனைவியை அடையாளம் அறியமுடியாத அளவுக்கு ஏற்பட்ட மறதி பெண்களை விலங்குக்கு ஒப்பாகக் கருதிய ஆரியரின் குமுகாயக் கோட்பாட்டைக் காட்டுகிறது.

தமிழிலக்கியங்களில் பரத்தையர் தொடர்பால் மனைவியைப்பிரிந் திருந்த செல்வக்குடியிற் பிறந்த மருத நிலத்தாரின் வாழ்க்கை காணப் படுகின்றதேயன்றி, அனைத்து ஆடவரும் ஒழுக்கக் கேட்டினராக இருந் திலர். பிராமணர் அனைவரும் மற்ற மூன்று சாதிப் பெண்களையும் கூட லாம் என்று மனுநூல் கூறுகிறது. குறிஞ்சி, முல்லை, நெய்தல் நிலத்தவர் மனைவியை மறந்து பரத்தையரை நாடியதில்லை. செல்வம் குவியும் இடத்தில் ஒழுக்கம் சிதைகிறது என்பது தமிழிலக்கியக் கோட்பாடு.

திருமணமாகுமுன் பூப்படைந்த பிராமணப் பெண்கள் காட்டுக்குத் துரத்தப்பட்டனர். அப்படித் துரத்தப்பட்ட பிராமணப் பெண்களை மணந்துகொண்ட, குடகுமலை வாழ் மக்களின் மரபு இன்றும் 'அம்ம குடவர்' என அழைககப்படுகிறது.

ஆபுத்திரன். சீதை ஆகியோர் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள். திருவள்ளுவர், ஔவையார் போன்ற பெருமக்களையும் இப்பட்டியலில் சேர்த்தனர். ஆரியர் வருகைக்குப்பின் உயர் சாதியினர் பிறமகளிரைக் கூடி மணந்து கொள்ளாமலும் ஈவு இரக்கமின்றியும் குழந்தைகளை எறிந்துவிட்டுச் செல்லும் வழக்கம் மிகுந்தது. மனைவியையும் குழந்தைகளையும் கைவிடும் பழக்கம் மிகுந்த காலத்தைத் தொல் காப்பியர் பொய்யும் வழுவும் தோன்றியகாலம் எனக்குறிப்பிடுகிறார்.

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

என்னும் தொல்காப்பிய நூற்பா ஆரியர் வருகையால் குமுகாயத்தில் தோன்றிய சிக்கலைத் தீர்க்க எழுந்த வாழ்வியல் சட்டமாகும்.

தமிழ்நாட்டில் இன்றளவும் வள்ளுவர் என்னும் சாதியினர் தாழ்த்தப்பட்டவர் அனைவராலும் ஐயர் என்று அழைக்கப்படுகின்றனர். வள்ளுவர் திருமணநாள் குறித்தலை 'ஐயர் வந்து நாளளத்தல்' என்பர்.

மொழியும் மக்கள் வாழ்வும் பிறமொழியாளரால் நலிவுறாதவாறு தொல்காப்பியர் வரையறை செய்தார். பிறமொழிகளின் தாக்குதல் களிலிருந்து மொழியைக் காத்தால் தான் இனத்தைக் காக்க முடியும்.

பிரகலாத எட்டப்ப வரலாறெல்லாம் நம் தமிழினத்திற்கே தனிச் சிறப்பு (!) அளிப்பன. இலங்கை வாழ் தமிழரின் இன்னல்களை அரை குறையாகவே முன்பு கேள்வியுற்றேன்; நெஞ்சு பொறுக்காது உளம் கொதித்தது. தமிழனின் ஆட்சி இருந்திருக்குமானால் சிங்களவரின் கொட்டம் அடக்கப்பட்டிருக்கும். இலங்கை இன்னல் பற்றித் தென் மொழியில் இல்லையே என ஏங்கினேன்! ஆனால் சென்ற தென்மொழி கண்டேன். உரைபடித்தேன்; பிறரையும் படிப்பித்தேன். அதுபோழ்து நான்கொண்ட உள்ளக் குமுறலுக்கும் எனக்கு, 'நண்பர்களான உண்மைத் தமிழர்களின் உள்ளக் கிளர்ச்சிக்கும் உவமையே இல்லை. மேலும் இதனைப் பயின்ற எனக்கு நண்பர் ஒருவர் இலங்கைத் தமிழரின் உண்மை வரலாற்றை உணர்ந்ததாகவும், நம் அரசியல்—இலங்கை அரசியல் ஒப்பீட்டினை நன்கு உணர்ந்ததாகவும் கூறினர்.

—புலவர். மு. ஆறுமுகம். க.இ, சாத்தனூர்.

*0:550:* அன்பினினிய ஐயா, வணக்கம். இலங்கையில் தமிழர்க்கு நேர்ந்து வரும் கொடுமைகளை விரிவாக, விளக்கமாக, உணர்ச்சியுடன் எழுதியுள்ளீர்கள், மானவுணர்வற்ற 'மர'த் தமிழர் கட்குத் தங்கள் ஆசிரியவுரை எழுச்சியூட்டியே இருக்கும். இதில் ஐயமின்று. தென்மொழியை 'ஏனோ தானோ' வென்று தொட்டுப் பார்த்தவர்களைப் பற்றிக்கொள்ளச் செய்யும் படியான ஆசிரியவுரை.' உணர்வுடன் கூடிய அறிவு வேட்கையரைத் தேடி ஓடக் காத்திருக் கிறோம் அது வரும் வரை.

—புலவர். வில்லவன். க.மு. கூகலூர். ஈரோடு.

*0:551:* பைந்தமிழ்ப் பாவல, பணிவான தமிழ் வணக்கம். தென்னிலங்கை மண்ணில் வெங்கொடுமைச் சிங்களச்சிறியர் நிகழ்த்திய வெறிக்கூத்தினைத் தங்களது ஆசிரியவுரையால் அறிந் தேன். படிப்பவர் நெஞ்சையுருக்கி, நினைவைக் கருக்கும் அரக்க வெறியாட்டத்தை—அவர்தம் இன அழிப்புத் திட்டத்தைத் தாங்கள், ஐயந்திரிபற, அற மன்றத்தில் திறம்பட அளவையிடும் வழக்குரைஞரை யொப்பப் பல்வேறு எடுத்துக் காட்டுகளால் தெளிவாக்கியிருந்தீர்கள்; அறமுறை பிறழ்ந்து, அச்சிங்கள வெறியர் செய்த கணக்கழிவு களையும், மீச்செலவுகளையும், நெறிகெட்ட வெறிச் செயல்களையும் இத்துணை விரிவாகவும், விளக்கமாகவும், கன்னெஞ்சும் கரைந்துருகும் வண்ணம் 'தென்மொழி' தவிர, வேறு எந்தவொரு தமிழ்(!) இதழும், நானறிந்தவரை எழுதவில்லை. அவற்றிற்கெல்லாம், இங்குள தமிழினமும் ஈழத்தமிழினமும் கொலைக்கும், புலைக்குமாய் அலைக் கழிக்கப்படுதலா தேவை? ஈழம்வாழ் ஏழ்மைத் தொழிலாளர்தம் கொலைகளைவிட, இங்குள திரையுலகப் பெருஞ்செல்வர் தம் தலைவலி தானே முகாமையான செய்தி. அதைத்தானே, தலைப்பிட்டு வெளி யிட்டு ஊதியம் பெறுகின்றன. இழிநிலையையும், ஈழநாட்டில் வெங் கொடுமைச் சாக்காட்டில், வேட்டையாடப்பட்டுச் செங்குருதி சிந்தும் தமிழ்க்குலத்தின் வாழத் தகா நிலையையும் நினைந்து நினைந்து, நெஞ் சுருகி, நெடிதெண்ணித் தாங்கள் எழுதிய ஆசிரியவுரை, தேய்புரிப் பழங்கயிறுபோல் மனம் நைந்துபோன பிணத்தமிழரையும் இன வுணர்வும் மொழியுணர்வும் பெறச் செய்யும் ஆற்றல் சான்றது. வேறு எந்த இதழாசிரியரும் எழுதற்கரிய உரை; ஈழநாட்டில் வாழவழி யின்றிச் சிங்களரால் சூறையாடப்படுதலும், தீக்கிரையாக்கப்படுதலும் திட்டமிடப்பட்ட ஓர் இன அழிப்பு முயற்சியே என்பது தேற்றம். அவர் தங்கொடுமை, தொடராவண்ணம் அவர்க்கு ஓர் உறைத்த எச்சரிக்கை யாகவும் தங்களது உரை அமைந்திருந்தது. உலகத் தமிழரனைவரும் 'தென்மொழி' வழி நின்று ஈழச் சிங்களர்தம் இரக்கமிலா அரக்க வெறியாட்டத்தைக்கனன்று, கண்டித்தல் வேண்டும்.

பெரு. தமிழ்வேந்தன். பவானிசாகர்.

*0:552:* அன்புமிக்க ஐயா, வணக்கம். தமிழ்த்தாயின் தனித் தன்மையையும் புகழையும் நிலைநிறுத்தும் பொருட்டு தாங்கள் ஆற்றி

வரும் பணிகளை நாங்கள் நெடுங்காலமாகவே அறிந்துள்ளோம். உலகின் மூத்த குடியாகத் தோன்றி உலக நாகரிகத்திற்கு வித்திட்டு, மொழி வளர்த்து, கலை வளர்த்து இன்று இரங்கத்தகு நிலையில் திசை தெரியாமல் தவிக்கும் நம் இனத்தின் எழுச்சிக்காக போராடி வரும் தங்களைச் சிறையிலடைத்துத் துன்புறுத்திய செய்தியறிந்து மிகவும் துயரப்பட்டோம். தங்களுக்கு மேலும் எந்தவோர் இன்னலும் நேராமல் தங்களின் தொண்டு தொடர தமிழன்னை தங்களுக்கு அருள் புரிய வேண்டுமென தமிழன்னையை இருகைகள் கூப்பி இறைஞ்சு கின்றோம். தங்களின் தொண்டிற்கு எங்களின் மன்றத்தின் வாழ்த்துதல்களையும் ஆதரவையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—பொ. இராமன். செயலாளர். திருக்குறள் மன்றம், கோலக்கிள்ளான், மலேசியா.

0:553: பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய, ஐயா அவர்களுக்கு வணக்கம். ஈழத் தமிழர்களுக்கு நேர்ந்து வரும் கொலைகள் கொந்தளிப்புகள், கற்பழிப்பு போன்ற கொடுமையான இன்னல்களால், தாயகத் தமிழர் ஒவ்வொருவரும் கொதிப்படைந்துள்ளனர். சிங்களவர்களின் வெறியாட்டங்கள், தொடர்ந்து கொண்டே இருக்கின்றன, தமிழர்களோ, வீடிழந்து, சொத்திழந்து. கற்பிழந்து நாட்டையும் இழக்கும் நிலையில் உள்ள நிலையில் தமிழர்களின் நல் வாழ்வுக்காக, இந்திய அரசும், தமிழக அரசும் விரைவான முயற்சி யெடுத்துத் தீர்வுகாண வேண்டும். கச்சத்தீவினை 'தாரை' வார்த்தது போல் இதிலும் புறக்கணிப்பாய் இருந்தால், நடுவணரசே! சிங்களவர்க்கு எதிராகத் தமிழ்நாட்டில் 'தென்மொழி வேந்தம்' போர்முரசு கொட்டும்: அதற்கு வேந்தம் என்றும் அணியமாக இருக்கும். ஈழத் தமிழர்களே! தன்மான மறவர்களே; எந்நிலைக்கும் அஞ்சாமல் எதிர்த்து நிற்பீர். உங்கள் தன்மானப் போராட்டம் தொடரட்டும் உண்மை என்றும் உறங்காது என்பதை "நன்றி மறந்த" சிங்களவர்க்கு உணர்த்துங்கள். நீங்கள் அடையும் வெற்றி தாயகத்தின் வெற்றிக்கு முதற் படியாகட்டும். துவளாதீர் ஈழத்தமிழ் மறவர்களே! துணிந்து நிற்பீர்; தாயகம் "மறந்து" தூங்கும் கொள்கை, ஈழத்தில் வீறு கொள்ளட்டும். இதோ தென்மொழி வேந்தம் அதற்கென அணியமாய் உள்ளது. 'வெல்க தனித்தமிழ்நாடு' வளர்க தமிழர் ஒற்றுமை!

—அரங்க-தமிழ்மணி. கோவை-15.

0:554: தென்மொழிக் காவல! தனித்தமிழ்ப் பாவல! விடுதலை மறவ! வணக்கம். வாழி. அளவில்லா தொல்லைகளுக்காட்பட்டு இன்னலுறும் ஈழத்தமிழனின் இழிநிலையெண்ணி உணர்வுள்ள தமிழ் நெஞ்சம் ஒவ்வொன்றும் உலைவைத்த நீராய்க் கொதிக்கின்றது. ஈழத்தில் புதிய அரசு பொறுப்பேற்ற ஒரு சில திங்கட்குள்ளே படுகொலைக்காளான தமிழர்களின் எண்ணிக்கை 300 என செய்திவழி அறியமுடிகின்றது. இன்னும் இருட்டடிப்புச் செய்யப்பட்ட செய்திகள் எத்தனையளவோ? தமிழர்களுக்குரித்தான கடைகள் சூறையாடப் பட்டுள்ளன. உடைமைகள் பறிக்கப்பட்டுள்ளன. பெண்கள் கற்பழிக்கப் பட்டுள்ளனர். வீடுகள் தீக்கொளுவப் பெற்றுள்ளன. வீடற்ற நிலையில் தெருவில் நிற்போர் ஒருபுறம், இதை நடுங்கியவாறெட்டி நின்று நாவலந்தீவுத் தமிழன் கைகட்டி ஆற்றலற்று வாய்பொத்தி ஊமையாக இருந்து விடுவதா! "சிங்களத் தமிழ்மக்கள் எங்கள் பட்டாளம்! சிங்களத் தமிழர்கள் எங்கள் பட்டாளம்! எங்குள்ள தமிழரும் எங்கள் பட்டாளம்!" என ஓங்கிக் குரலெடுத்துக் கூவிய

(—தொடர்ச்சி உள்ளே 37-ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005: (தமிழகம்)